


20.01.2025 - திங்கட்கிழமை

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

ஆண்டு: 01 இதழ் : 73 குரோதி வருடம் தை மாதம் 07 ஆம் நாள் - ஹிஜ்ரி 1446 ரஜப் 21 பக்கங்கள் - 12




# மட்டு. - அம்பாறையில் மீண்டும் பெரு வெள்ளம்

## அம்பாறை

- சேனநாயக்க சமுத்திரத்தின் 05 வான்கதவுகள் திறப்பு
- அம்பாறை-கண்டி போக்குவரத்து தடை

(அக்கரைப்பற்று ரமீஸ் )

அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் அடைமழை காரணமாக இம்மாவட்டத்தின் டி.எஸ். சேனநாயக்க சமுத்திரத்தின் ஐந்து வான்கதவுகள்(தொடர்ச்சி...) 02



## மட்டக்களப்பு

- மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு
- நிரம்பி வழியும் நிலையில் உறுகாமம், நவகிரி குளங்கள்:உன்னிச்சை வான்திறப்பு

(ஏ.எச்.ஏ.ஹுஸைன்)

மட்டக்களப்பு மாவட்டத்திலும் கடந்த சில நாட்களாக மீண்டும் அடை மழை பெய்யத் துவங்கியுள்ளது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாகப்பாதிக்கப்பட்டுள்ளது. (தொடர்ச்சி...) 02



## இஸ்ரேல்-ஹமாஸ்

# 3 மணிநேர தாமதம்: அமுலுக்கு வந்தது போர் நிறுத்தம்!





காசாவில் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட போர் நிறுத்தம் மூன்று மணி நேர தாமதத்திற்குப் பின்னர் நேற்று (19) நடைமுறைக்கு வந்தது. ஆரம்பத்தில் போர் நிறுத்தத்தின் முதல் கட்டம் அந்நாட்டு நேரப்படி ஞாயிற்றுக்கிழமை (19) காலை 8:30 மணிக்கு அமுலுக்கு வருவதாக இருந்தது. எனினும், விடுவிக்கப்படும் மூன்று பெண் பணயக்கைதிகளின் பட்டியலை ஹமாஸ் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதால் (தொடர்ச்சி...) 02

## மன்னார் துப்பாக்கி சூட்டு சம்பவம்:

# இராணுவ சிப்பாய் உட்பட மூவர் கைது

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் நீதிமன்றத்திற்கு முன் கடந்த வியாழன் (16) காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவத்தில் பணியாற்றும் சிப்பாய் ஒருவர் உள்ளடங்கலாக மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராணுவத்தில் பணியாற்றும் சிப்பாய் மன்னார்–தலைமன்னார் பிரதான வீதி நடுக்குடா (தொடர்ச்சி...) 02

# கிழக்கு பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

( முகம்மட் முக்தார் )

கிழக்கு மாகாணத்தில் நிலவும் அசாதாரண காலநிலையை கருத்தில் கொண்டு இன்று(20) கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கே.குணநாதன் அறிவித்துள்ளார்.

தற்போது கிழக்கு மாகாண பாடசாலைகளில் வகுப்பேற்றப்பரீட் சைகள் நடைபெறுவதால் இன்று நடைபெறவுள்ள சகல பரீட்சைக ளும் இம்மாதம் 25ஆம் திகதி சனிக் கிழமை நடைபெறுமெனவும் (தொடர்ச்சி...) 02

## அதிர்ச்சி தகவல்:

# அஸ்வெசும பெறுபவர்களில் 33,000 பேர் அரச ஊழியர்கள்

( முகம்மட் முக்தார் )

வறிய குடும்பங்களுக்கு வழங்கப்படும் அஸ்வெசும கொடுப்பனவு 33,000 அரச ஊழியர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

அஸ்வெசும கொடுப்பனவு தொடர்பான மீளாய்வுநடவடிக்கைகளின் போது இது தொடர்பான தகவல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சின் கீழ் இயங்கும் அஸ்வெசும அலுவலகம் தெரிவித்துள்ளது.

இக்கொடுப்பனவை முறைகேடான வழியில் பெற்ற குறித்த அரச ஊழியர்களுக்கெதிராக (தொடர்ச்சி...) 02

# திருமலையில் தமிழரசு கட்சி மத்திய குழு கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள்

## சமஷ்டி யாப்பை உருவாக்கினால் அரசுக்கு ஆதரவு - சுமந்திரன்

( எஸ்.கீதபொன்கலன் )

தமிழரசுக்கட்சி சமஷ்டியை இலக்காக கொண்டது.எனவே சமஷ்டி தீர்வை உள்ளடக்கிய புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்படுமாயின் அரசாங்கத்திற்கு ஆதரவளிப்போமென தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் (தொடர்ச்சி...) 02



# பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்து: 40 காயம்

மாத்தறை – தங்கல்ல பிரதான வீதியின் கந்தர தலல்ல பகுதியில் நேற்று காலை இரு தனியார் பஸ்கள் நேருக்கு நேர் மோதி ஏற்பட்ட கோர விபத்தில் 40க்கும் மேற்பட்டோர் காயமடைந்து வைத்தியசாலையில் (தொடர்ச்சி..) 02

# கல்கிசையில் துப்பாக்கிச் சூடு; ஒருவர் பலி

கல்கிசையின் சிறிபுர பகுதியில் நேற்று (19) நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டார்.

சம்பவத்தில் கல்கிசை – படோவிட 2ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய சவிந்து தரிந்து என்பவரே உயிரிழந்துள்ளார். இவர் டுபாயில் பதுங்கியுள்ள பாதாள உலகக் கும்பல் (தொடர்ச்சி...) 02

# யாழ்ப்பாணத்திலும் கடும் மழை பலத்த காற்று 222பேர் பாதிப்பு!

( பு.கஜிந்தன் )

யாழ்ப்பாணத்தில் பெய்த மழை மற்றும் வீசிய பலத்த காற்றினால் 49 குடும்பங்களைச் சேர்ந்த 222 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார். அந்தவகை யில் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/68 கிராம சேவகர் பிரிவில் 48 குடும்பங்களைச் சேர்ந்த 217 பேரும், ( தொடர்ச்சி...) 02

# 363 சமுர்த்தி உத்தியோகத்தரின் கல்வித்தகைமைகள் போலி

## கணக்காய்வில் அம்பலம்

( முகம்மட் முக்தார் )

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் 363 சமுர்த்தி அதிகாரிகளின் தனிப்பட்ட கோப்புகள்,அவர்கள் நியமனங்களைப் பெறுவதற்காக சமர்ப்பித்த கல்விச் சான்றிதழ்கள் போலியானவை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய கணக்காய்வு அலுவல கம் 2023 ம் ஆண்டுக்காக வெளியிட்ட (தொடர்ச்சி.) 02




கல்முனை மாநகரில் உள்ள தமிழர் கலாசார பேரவை வளாகத்தில் நேற்று மாலை உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவரின் சிலை கொட்டும் மழைக்கும் மத்தியில் மிகவும் உணர்வு பூர்வமான முறையில் திறந்து வைக்கப்பட்டது.

செல்லையா - பேரின்பராசா

## முன்னாள் சட்டமா அதிபர்

# சிவா பசுபதி ஆஸியில் மரணம்



இலங்கையின் 34ஆவது சட்டமா அதிபராக பதவிவகித்த சிவா பசுபதி அவுஸ்திரேலியாவில் காலமானார் . சிவா பசுபதி இலங்கையின் 34 ஆவது சட்ட மா அதிபராக 13 வருட காலம் (1975 - 1988) (தொடர்ச்சி...) 02

# இன்று ஜனாதிபதியாக பதவியேற்கிறார் டிரம்ப்

அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக டொனால்ட் டிரம்ப் இன்று (20) பதவியேற்க உள்ளார். இதற்காகப் புளோரிடாவில் இருந்து புறப்பட்ட டிரம்ப் அமெரிக்க தலைநகர் வொஷிங்டனுக்கு நேற்றுமுன்தினம் (18) சென்றடைந்தார். பதவியேற்பு விழாவை (தொடர்ச்சி...) 02



# விக்டர் ஐவன் காலமானார்



மூத்த ஊடகவியலாளரும் ராவய பத்திரிகையின் முன்னாள் ஆசிரியருமான விக்டர் ஐவன் காலமானார்.

அச்சமற்ற அறிக்கையிடல் மற்றும் கூர்மையான விமர்சனங்களையும் செய்யக்கூடியவர் என பெயர் பெற்றவ அவர், இலங்கை ஊடகங்களில் (தொடர்ச்சி...) 02

# "கிளீன் ஸ்ரீ லங்கா" திட்டம் நாடாளுமன்றில் 02 நாள் விவாதம்

நாடாளுமன்றம் நாளை 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கூடவுள்ளதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார். சபாநாயகர் (வைத்திய கலாநிதி) ஜகத் விக்ரமரத்ன தலைமையில் 10 ஆம் திகதி கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, நாளை 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.00 மணி வரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 வரையான நாடாளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து, மு.ப. 10.00 மணி முதல் மு.ப. 11.00 மணி வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 11.00 மணி முதல் மு.ப. 11.30 மணி வரை நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்விக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## இன்று...

முன்னிட்டு அமெரிக்க தலைநகரில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இன்று வொஷிங்டனின் புறநகரில் வேர்ஜினியாவின் ஸ்டெர்லிங்கில் உள்ள ட்ரம்ப்பின் தேசிய கோல்ப் கிளப்பில் இரவு விருந்து நிகழ்ச்சிக்கு ஏற்பாடாகியிருந்தது. இதில் புதிய ஜனாதிபதியாகும் ட்ரம்பும், துணை ஜனாதிபதியாகும் ஜே.டி.வான்சும் பங்கேற்று தங்களின் அமைச்சரவை சகாக்களை வரவேற்று விருந்தளிக்கின்றனர்.

பதவியேற்கும் விழாவான இன்று அவர் வெள்ளை மாளிகைக்கு செல்லும் முன்பாக பாரம்பரிய வழக்கப்படி செயின்ட் ஜோன்ஸ் எபிஸ்கோபல் தேவாலயத்தில் பிரார்த்தனை செய்வார். அதைத் தொடர்ந்து, வெள்ளை மாளிகைக்கு வரும் ட்ரம்புக்கு தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன், அவரது மனைவி ஜில் பைடன் இருவரும் தேநீர் விருந்து அளித்து வரவேற்பார்கள்.

பின்னர் ஜனாதிபதி பைடன் புதிய ஜனாதிபதி ட்ரம்ப்பை நாடாளுமன்றத்திற்கு அழைத்துச் செல்வார். அங்கு முறைப்படி 47வது ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்றுக் கொள்வார். சம்பிரதாயப்படி, தனது முதல் அறிவிப்பு குறித்த ஆவணத்தில் ட்ரம்ப் கையெழுத்திட்டு ஜனாதிபதி பணியைத் தொடங்குவார்.

## திருமலையில்...

கூறினார்.

திருகோணமலையில் தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் சனிக்கிழமை (18) நடந்தது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சுமந்திரன் மேலும் கூறுகையில்;

புதிய அரசியல் யாப்பு தொடர்பில் கட்சியின் சார்பில் கடிதம் ஒன்றை அரசாங்கத்திற்கு எழுதவுள்ளோம். எமது கோரிக்கையான சமஷ்டி தீர்வை உள்ளடக்கிய புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறு நடந்தால் எமது கட்சி அதனை ஆதரிக்கும்.மேலும் கட்சி என்ற வகையில் எமது மக்களின் கோரிக்கைகளை அடிப்படையாக கொண்ட அரசியல் யாப்பு தொடர்பில் கலந்தாலோசிக்க உள்ளோம். கட்சி மட்டத்தில் இதற்கென விசேட உப குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் தலைவராக கட்சியின் தற்போதைய தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் செயற்படுவார். ஆறு பேர் இக்குழுவில் அங்கம் வகிப்பர் என்றும் கூறினார்.

தொடர்ந்து மத்திய செயற்குழுவின் தீர்மானங்கள் பற்றி அவர் கூறுகையில்,

திருகோணமலை மாவட்ட நீதிமன்றில் கட்சிக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கில் வழக்காளி கோரிய நிவாரணங்களை அவருக்கு வழங்கி வழக்கை முடிவுறுத்துவது என மத்திய குழு சென்ற முறை எடுத்த தீர்மானத்தின் படி செயற்படுவது என இன்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

உள்ளூராட்சி தேர்தலில் 2023 இல் கட்சி சார்பில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்தவர்களில் இறந்தவர்கள்,வெளிநாடு சென்றோர் மற்றும் கடந்த தேர்தல்களில் கட்சிக்கு எதிராக செயற்பட்டவர்களை தவிர ஏனையவர்களுக்கு மீள சந்தர்ப்பத்தை முன்னுரிமை அடிப்படையில் வழங்குவது,ஏனைய வெற்றிடங்களுக்கு புதியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டது.

இத்தேர்தலில் கட்சி தனித்தே போட்டியிடும்.ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் முடிவை எதிர்த்து போட்டியிட்ட பா.அரியநேத்திரன் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.இதே வேளை இத்தேர்தலில் கட்சியின் முடிவிற்கு எதிராக செயற்பட்டவர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கட்சித்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் மற்றும் நிர்வாக செயலாளர் குலநாயகம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## 363 சமுர்த்தி...

வருடாந்த ஆண்டறிக்கை இதனை வெளிப்படுத்தியுள்ளது.

2019 ஆம் ஆண்டில் இவர்களில் 77 பேர் பணிநீக்கம் செய்யப்பட்டதாகவும், 20 பேர் சேவையை விட்டு வெளியேறியதாகவும் கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி, ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் பணியில் இருந்து ஓய்வு பெற்ற 30 அதிகாரிகளுக்கு, அவர்கள் நியமிக்கப்பட்ட நாளிலிருந்து ரூ.95 மில்லியன் ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன்,2023 ஆம் ஆண்டில் மாத்திரம் மொனராகலை மாவட்டத்தில் 04 அதிகாரிகளுக்கு 40 மில்லியன் ரூபாவும், கொழும்பு மற்றும் மாத்தறை மாவட்டங்களில் 17 அதிகாரிகளுக்கு 87 மில்லியன் ரூபாவும் ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது.

இவர்களில் பலர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்றுமுள்ளனர். அரசியல்வாதிகளின் தீவிர ஆதரவாளர்களுக்கு இந்நியமனம் போட்டிப் பரீட்சைகள் எதுவுமின்றி வழங்கப்பட்டது.

இவர்கள் பணிக்கு சேர்ந்த ஒரு வருடத்திற்குள் இவர்களது கல்விச்சான்றிதழ்கள்பரீட்சைத் திணைக்களம் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இதற்கு பொறுப்பான அதிகாரிகள் இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று தேசிய கணக்காய்வு அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமன விதிகளின்படி, அத்தகைய அதிகாரிகளின் போலி ஆவணங்கள் கண்டு பிடிக்கப்பட்டவுடன் நியமனங்கள் உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும் எனவும் அவர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் அனைத்து சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணத்திலும்...

ஜே/69 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த 5பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் 49 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்த அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா, கடுமையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களையும் வழங்கி வைத்தார்.

## இஸ்ரேல் - ஹமாஸ்...

அது தாமதமானது.

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் படி, ஞாயிற்றுக்கிழமை விடுவிக்கப்படவுள்ள பணயக்கைதிகளின் பட்டியலை ஹமாஸ் தாமதமாக வெளியிட்ட பின்னர் உள்ளூர் நேரப்படி காலை 11:15 மணிக்கு போர் நிறுத்தம் அமுலுக்கு வந்ததாக இஸ்ரேலிய பிரதமரின் அலுவலகம் கூறியது.

விடுவிக்கப்படும் மூன்று இஸ்ரேலிய பெண் கைதிகள் ரோமி கோனென், டோரன் ஸ்டெய்ன்பிரெச்சர் மற்றும் எமிலி டமாரி என்று ஹமாஸ் பெயரிட்டதை அடுத்து இந்த அறிக்கை வந்தது. பல பாலஸ்தீனிய கைதிகளுக்கு ஈடாக விடுவிக்கப்படவுள்ள மூன்று கைதிகளின் பெயர்களை வழங்குவதற்கான தனது உறுதிப்பாட்டை ஹமாஸ் நிறைவேற்றவில்லை என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு முன்னதாக குற்றம் சாட்டியிருந்தார்.

இதேவேளை, போர் நிறுத்த உடன்படிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து இஸ்ரேலிய அரசாங்கத்தை விட்டு வெளியேறுவதாக தீவிர வலதுசாரி யூத சக்தி கட்சி அறிவித்தது.

அதன்படி, இஸ்ரேலிய தேசிய பாதுகாப்பு அமைச்சர் இதமர் பென்-க்விர் (ஜவயஅயச டீநn-புஎசை) மற்றும் அவரது தீவிர வலதுசாரி யூத சக்தி கட்சியின் அமைச்சர்கள் அரசாங்கத்தில் இருந்து இராஜினாமா செய்வதாக கூறியதுடன், அதற்கான கடிதங்களையும் சமர்ப்பித்தனர்.

பிரதமர் நெதன்யாகுவுக்கு எழுதிய இராஜினாமா கடிதத்தில் இஸ்ரேலிய தேசிய பாதுகாப்பு அமைச்சர் இதமர் பென்-க்விர், அரசாங்கம் கவிழ்க்க தாம் பணியாற்றமாட்டேன் என்றும், ஆனால் போர்நிறுத்த ஒப்பந்தத்தை "பயங்கரவாதத்திற்கு முழுமையான வெற்றி" என்றும் விமர்சித்தார்.

இதனிடையே போர் நிறுத்தம் அமுலுக்கு வருவதற்கு முன்பாக இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல்களில் குறைந்தது 10 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கிழக்கு...

அறிவிக்கப் பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள தேசிய பாடசாலைகளுக்கு இவ்விடுமுறை வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## அதிர்ச்சி...

நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பெற்றுக்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளும் அறவிடப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அஸ்வெசும கொடுப்பனவு கோரி 08 இலட்சம் பேர் விண்ணப்பித்துள்ளதாகவும் இது தொடர்பான பரீசிலனை இடம்பெறுவதாகவும் மேற்படி அலுவலகம் மேலும் அறிவித்துள்ளது.

## மன்னார்...

கடற்கரை பகுதியில் வைத்து கைது செய்யப்பட் டுள்ளார். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் போது மேலும் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் நொச்சிக்குளம் பகுதியில் கடந்த 2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற இரட்டைப் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை வியாழக்கிழமை(16) மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள இருந்த நிலையில் விசாரணைகளுக்காக சென்ற சந்தேக நபர்கள் மூவர் உள்ளடங்கலாக நான்கு நபர்கள் மீது நீதிமன்றத்திற்கு முன் வைத்து துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது இருவர் உயிரிழந்ததுடன் , மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

இந்த நிலையில் பொலிஸார் விசேட தேடுதல்களை மேற்கொண்டனர். தொடர் தேடுதல் நடவடிக்கைகளையடுத்து சந்தேக நபரான இராணுவ சிப்பாய் பேசாலை நடுக்குடா பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடையவர் என கருதப்படும் குறித்த இராணுவ சிப்பாய் கைது செய்யப்பட்டு பேசாலை பொலிஸ் நிலையத்தில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில மேலும் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை மன்னார் மற்றும் பேசாலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## முன்னாள்..

பணியாற்றியுள்ளார்.இவர் ஜனாதிபதி சட்டத்தரணியுமாவார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் கொழும்பு ஆனந்தா கல்லூரி ஆகியவற்றில் தனது பாடசாலை கல்வியைப் பயின்ற சிவா பசுபதி, கொழும்பு பல்கலைக் கழகத்தில் தனது சட்ட பட்டப்படிப்பை பூர்த்தி செய்ததன் பின்னர் இங்கிலாந்தின் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்திலும் பட்ட பின்படிப்பை பூர்த்தி செய்திருந்தார்.

ரணில் விக்கிரமசிங்க 2002ஆம் ஆண்டில் பிரதமராக பதவி வகித்த தருணத்தில் அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஒஸ்லோ பேச்சுவார்த்தை நடைபெற்றபோது தமிழீழ விடுதலைப்புலிகளின் பேச்சுவார்த்தை குழுவின் ஆலோசகராக சிவா பணியாற்றியிருந்தார். அவ்வமைப்பின் அரசியல் விவகார குழுவின் பிரதிநிதியாகவும் பணியாற்றியிருந்தார். விடுதலைப்புலிகள் இடைக்கால தீர்வாக முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை இந்த அரசியல் விவகார குழுவே தயாரித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## பஸ்கள்...

அனுமதிக்கப்பட்டனர்.

எம்பிலிப்பிட்டியவில் இருந்து மாத்தறை நோக்கி பயணித்த பஸ் ஒன்றும், மாத்தறையில் இருந்து தங்காலை நோக்கி பயணித்த பஸ் ஒன்றுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளன.

காயமடைந்தவர்களில் 6 பேர் மேலதிக சிகிச்சைக்காக மாத்தறை பொது வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

விபத்து தொடர்பில் மாத்தறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## விக்டர்...

ஒரு முக்கிய நபராக தனது இடத்தை உறுதிப்படுத்தினார்.

பத்திரிகை மற்றும் ஊடக சுதந்திரத்திற்கான அவரது அர்ப்பணிப்பு அவருக்கு பரவலான மரியாதையை பெற்றுத் தந்தது.

வெளிநாடுகளில் பல்வேறு சர்வதேச மாநாடுகளில் பங்கேற்ற இவர், உள்ளூரில் இளம் ஊடகவியலாளர்களை பயிற்றுவிப்பதிலும் பெரும் பங்காற்றினார்.

## அம்பாறை....

திறக்கப்பட்டு மேலதிக நீர் வெளியேற்றப்பட்டுக் கொண்டிருப்பதால் இம்மா வட்டத்தில் உள்ள தாழ்நிலப் பிரதேசங்களில் உள்ள மக்கள் மிகுந்த அவதானத் துடன் செயற்படுமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பணிப்பாளர் எம்.ஏ.சி. முகம்மட் றியாஸ் தெரிவித்தார்.

இம்மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் அடைமழை காரணமாக தாழ்நிலப் பகுதிகள் முற்றாக மூழ்கியுள்ளன.

கன மழை காரணமாக அம்பாறை-கண்டி பிரதான போக்குவரத்துப் பாதை மூடப்பட்டுள்ளதால் அம்பாறை மாவட்டத்தில் இருந்து கண்டி நோக்கி பயணிக்கும் பயணிகள் வேறு போக்குவரத்து பாதையினை பயன்படுத்துமாறு அறிவிக்கப்படுவதாகவும் பிரதிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, களியோடை ஆற்றுப் பகுதியினை அண்டியுள்ள தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பயின்று வரும் ஆயிரக்கணக்கான மாணவர்களையும் வெள்ள நிலைமையிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு அங்குள்ள விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களை பாதுகாப்பான பகுதிகளில் தங்க வைப்பதற்கான வேலைத்திட்டத்தினையும் மேற்கொள்ளுமாறு பல்கலைக்கழக நிருவாகத்தினரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதிப் பணிப்பாளர் றியாஸ் தெரிவித்தார்.

நேற்று நண்பகல் வரையான 24 மணி நேரத்தில் அம்பாறை மாவட்டத்தின் எக்கல்ஓயா பகுதியில் 123.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி அதிகப்படியாக பதிவாகியுள்ளதுடன், இங்கினியாகலை பிரதேசத்தில் 120.0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், அம்பாறை நகரப் பகுதியில் 103.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், பன்னலகம பகுதியில் 100.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பொத்துவில் பிரதேசத்தில் 71.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட வானிலை அவதான நிலைத்தின் மூலமாக தெரிவிக்கப்படுகின்றது.

பலத்த மழையினால் அம்பாறை நகரிலிருந்து ஹாடி தொழில்நுட்பவியல் கல்லூரிப் பகுதிக்கு அண்மையில் அமைந்துள்ள சதுவெல்ல பகுதியில் உள்ள நீர் நிலை முழுமையாக நிரம்பியுள்ளதானால் இப்பிரதேசத்திற்கு செல்கின்ற மக்களும் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. இதுதவிர, ஒலுவில் அஷ்ரஃப் நகர்ப் பிரதான பாதை சிதைவடைந்துள்ளதனால் இப்பகுதி மக்களும் பாதுகாப்பாக செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

டி.எஸ்.சேனநாயக்க சமுத்திரத்தின் மூலமாக வெளியேற்றப்படும் மேலதிக நீர் கல்லோயா ஆற்றின் மூலம் பிரதானமாக செல்வதனால் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களான அம்பாறை, தமண, மகாஓயா, உகன, சம்மாந்துறை, காரைதீவு, சாய்ந்தமருது, நற்பிட்டிமுனை, நாவிதன்வெளி, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, இறக்காமம், திருக்கோவில், பொத்துவில் உள்ளிட்ட பிரதேசங்களில் தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கின்ற மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு மதஸ்தலங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் மூலமும் ஒலிபெருக்கி வாயிலாக அறிவுறுத்தப்படுகின்றன.

அதிக மழை வீழ்ச்சி காரணமாக இம்மாவட்டத்தில் செய்கை பண்ணப்பட்ட ஆயிரக்கணக்கான விவசாயச் செய்கைகள் பாதிப்படைந்துள்ளன. அறுவடைக்குத் தயாராக இருந்த நெல் விவசாயச் செய்கைக்கு மிகுந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளன.

இதேவேளை, கடற்றொழிலில் ஈடுபட்டு வருபவர்கள் தமது மீன்பிடி படகுகள் வள்ளங்கள் போன்றவற்றை கடற்கரையொருகிலிருந்து அப்புறப்படுத்தி கரையொதுக்கி வைத்துள்ளனர். கடல் அலைகளின் வீரியம் இம்மாவட்டத்தில் அதிகரித்து காணப்படுவதால் கடல் அலை சுமார் 15 அடிக்கு மேல் எழுவதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தின் சில பிரதேசங்களில் முதலைகள், பாம்புகள், நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் விசஜந்துக்கள் போன்றவற்றின் நடமாட்டம் அதிகமுள்ளதனால் பொது மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறும், வெள்ள நிலைமையினை பார்ப்பதற்காக செல்பவர்களும், நீர் பகுதிகளில் தேவையற்ற வகையில் நடமாடுதல் மற்றும் நீராடுவதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.அத்துடன் கொதித்தாறிய நீரைப் பருகுமாறும் அனர்த்த முகாமைத்து மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.முகம்மட் றியாஸ் மேலும் தெரிவித்தார்.

## கல்கிசையில்...

உறுப்பினரான "கொஸ் மல்லி" என்பவரின் உதவியாளர் என தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டை நடத்த வந்த சந்தேக நபர் 47 வயதுடையவர் என்றும், அவர் படோவிட்ட அசங்கவின் குழுவைச் சேர்ந்தவர் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கொஸ் மல்லிக்கும் படோவிட்ட அசங்கவிற்கும் இடையே நீண்டகாலமாக இருந்த தகராறின் விளைவாக இந்தக் கொலை இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இரு தரப்பினருக்கும் இடையிலான தகராறில் இதுவரையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 7 ஆக அதிகரித்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் மேல் மாகாணத்தின் தெற்குப் பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் கயங்க மாரப்பன தலைமையில் நடைபெற்று வருகின்றன.

## மட்டக்களப்பு...

ஞாயிற்றுக்கிழமை (19) முடிவடைந்த மாலை வரை முடிவடைந்த 24 மணி நேரத்தில் மட்டக்களப்பு நவகரி பிரதேசத்தில் 92 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மட்டக்களப்பு வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வயல் காட்டுப் பகுதிகளில் மட்டுமன்றி கடலோரத்தை அண்டியுள்ள நகரப் பகுதிகளிலும் கன மழை பெய்துவருகிறது.

இதனால், களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி, கொக்கட்டிச்சோலை, ஆரையம்பதி, புதிய காத்தான்குடி, காத்தான்குடி, மட்டக்களப்பு நகரம், ஏறாவூர், வாழைச்சேனை, உட்பட பல பிரதேசங்களில் வீதிகள் நீரில் மூழ்கியுள்ளன. இங்குள்ள மக்களின் இயல்பு வாழ்க்கையும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மழை பெய்யும் என மாவட்ட வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரிய குளமான உறுகாமம், உன்னிச்சை, நவகிரி குளம் உட்பட பல குளங்களில் நீர் நிரம்பியுள்ளது.

# கல்முனையில் திருவள்ளுவர் சிலை திறப்பு






கல்முனை மாநகரில் உள்ள தமிழர் கலாசார பேரவை வளாகத்தில் நேற்று மாலை உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவரின் சிலை கொட்டும் மழைக்கும் மத்தியில் மிகவும் உணர்வு பூர்வமான முறையில் திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் ஆன்மீக அதிதியாக கலந்து சிறப்பித்த மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ண மிஸன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவனந்தாஜீ மகராஜ் இச் சிலையை திரைநீக்கம் செய்து திறந்து வைத்தார். உணர்வு பூர்வமான இவ் விழாவில் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரீ.ஜே. அதிசயராஜ் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

(செல்லையா - பேரின்பராசா)

# ஊடகத்துறையின் முன்னேற்றத்திற்காக ஊடக நிறுவனமொன்றை ஸ்தாபிக்க திட்டம்



இலங்கையில் ஊடகவியலாளர்களின் ஊடக அறிவை மேம்படுத்தி அவர்களின் தொழிலை மேலும் விரிவுபடுத்தும் வகையில் அவர்களுக்கான ஊடக நிறுவனமொன்றை ஸ்தாபிப்பதற்கு தேவையான திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டொக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அண்மையில் நாரஹேன்பிட்டியில் உள்ள ஊடக அமைச்சில் இலங்கை ஊடகவியலாளர் சபை உறுப்பினர்களுடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இவ்வாறானதொரு நிறுவனத்தை நிறுவுவதற்கு முன்னைய அரசாங்கங்கள் பல முயற்சிகளை மேற்கொண்டிருந்த போதிலும் அது இதுவரை சாத்தியமடையவில்லை என்பது இந்த கலந்துரையாடலில் தெரியவந்துள்ளது.

எதிர்வரும் காலங்களில் இந்த நிறுவனத்தை ஸ்தாபிப்பதே தமது நோக்கம் எனவும் இலங்கையில் ஊடகத் தொழிலில் ஈடுபடுபவர்ளை சிறந்த ஊடகவியலாளர்களாக இந்த தேசத்திற்கு அறிமுகப்படுத்துவதே எமது நோக்கம் எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஊடகவியலாளர்களின் சுதந்திரம் அத்துடன் கௌரவம் மற்றும் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் 50 வருடங்கள் பழமையான 1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பத்திரிகைச் சபைச் சட்டத்தை புதிய தகவல் தொடர்பு போக்குகளுக்கு ஏற்றவாறு புதுப்பிப்பது குறித்து நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

ஊடகவியலாளர்களுக்கான ஒழுக்க நெறிமுறைகள் நடைமுறையில் இருந்தாலும் அதில் தற்போது சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென கண்டறியப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இலங்கை ஊடகவியலாளர் சபையின் முயற்சியின் கீழ் ஊடகவியலாளர்களின் கல்வித் தரம் நலன் மற்றும் தொழில்சார் திறன்களை மேம்படுத்துவதற்கு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை எவ்வாறு ஒழுங்கமைக்க வேண்டும் என்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக ஊடகவியலாளர்களுக்கான விரிவான கற்கை நெறியை ஆரம்பிக்குமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் தொடர்பாடல் பாடத்தில் ஆர்வமுள்ளவர்களை இலக்காகக் கொண்டு நடத்தும் தொடர் சிறப்புப் பட்டறைகளை இந்த நிறுவனக் கட்டமைப்பின் கீழ் தொடரவும் முடிவு செய்யப்பட்டது.

இக்கலந்துரையாடலில் ஊடகத்துறை அமைச்சின் மேலதிக செயலாளர் என்.ஏ.கே.எல்.விஜேநாயக்க, இலங்கை பத்திரிகை ஆணையாளர் நிரோஷன தம்பவிட்ட, தற்போதைய தலைவர் பேராசிரியர் டியூடர் வீரசிங்க, சிரேஷ்ட ஊடகவியலாளர் அரியநந்த தொம்பகஹவத்த, சட்டத்தரணி மஹிஷா முதுகமுவ, லெஸ்லி தேவேந்திரதா ஆகியோர் கலந்துகொண்டனர்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் தை மாதம் 07ஆம் நாள் திங்கட்கிழமை

**மேஷம்** பணியிடத்தில் சிறந்த நிலையில் இருப்பீர்கள்.

**ரிஷபம்** இன்று பண வரவு காணப்படும்.

**மிதுனம்** இன்று வெற்றிக்கான முயற்சியை எடுக்க வேண்டும்.

**கடகம்** உங்கள் உறுதி மற்றும் தைரியம் மூலம் வெற்றி பெறுவீர்கள்.

**சிம்மம்** இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும்.

**கன்னி** இன்று பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

**துலாம்** முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

**விருச்சிகம்** இன்று வெற்றிகரமான நாளாக இருக்கும்.

**தனுசு** இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும்.

**மகரம்** இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும்.

**கும்பம்** நம்பிக்கையுடன் இருந்தால் நன்மை காணலாம்.

**மீனம்** நீங்கள் கடினமாக உழைப்பதன் மூலம் வெற்றி காண்பீர்கள்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று காலை 10:35 வரை சஷ்டி பின்பு சப்தம்.
**நட்சத்திரம்:** இன்று இரவு 09:07 வரை அஸ்தம் பின்பு சத்திரை.
**யோகம்:** சித்த.
**சந்திராஷ்டமம்:** சதயம், பூரட்டாதி.
**சூலம்:** கிழக்கு.
**இராகு காலம்:** 07:30 AM முதல் 09:00 AM வரை.
**குளிகை:** 01:30 PM முதல் 03:00 PM வரை.
**எமகண்டம்:** 10:30 AM முதல் 12:00 PM வரை.

### நெல்சந்தைப்படுத்தும் சபைக்கு விற்கப்படும்

# நெல் கிலோ ஒன்றுக்கு 2 ரூபாய் போக்குவரத்து கொடுப்பனவு

(முகம்மட் முக்தார்)

நெல்சந்தைப்படுத்தும் சபையின் நெற்களஞ்சியசாலைகளுக்கு நெல்லை எடுத்துச் சென்று விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு நெல்லை போக்குவரத்து செய்வதற்கான கொடுப்பனவை வழங்க நெற்சந்தைப்படுத்தல் சபை தீர்மானித்துள்ளது. இதற்கமைய சபையின் நெற்களஞ்சிய சாலைகளுக்கு கொண்டு செல்லப்படும் ஒரு கிலோ நெல்லுக்கான போக்குவரத்து கொடுப்பனவாக 2 ரூபாயை செலுத்த மேற்படி சபை தீர்மானித்துள்ளது.

இதுபற்றி நெற்சந்தைப்படுத்தும் சபை முகாமையாளர் சகல நெற்களஞ்சியசாலை பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளார். இந்நடைமுறை இப்பெரும்போகத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படுமெனவும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாண திருவள்ளுவர் கலாசார மையம் தமிழக ஆளுநர் வரவேற்பு

"யாழ்.கலாசார மையத்துக்கு திருவள்ளுவர் கலாசார மையம்" என்று மறுபெயரிடுவது பிரதமர் மோடியின் மற்றொரு அடையாளமாகும். இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான பல்லாயிரம் ஆண்டு பழமையான கலாசார மற்றும் நாகரீக தொடர்பை இது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது என தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி தெரிவித்துள்ளார். தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி தனது சமூக வலைதள பதிவில் கூறி இருப்பதாவது:- தமிழ்மொழி மற்றும் பண்பாட்டின் வளர்ச்சியில் அதிக உந்துதலுடன் இந்தியா உதவியுடன் கட்டப்பட்ட யாழ்ப்பாணத்தில் உள்ள புகழ் பெற்ற கலாசார மையத்தை "திருவள்ளுவர் கலாசார மையம்" என்று மறுபெயரிடுவது பிரதமர் மோடியின் மற்றொரு அடையாளமாகும்.

பிரதமர் நரேந்திர மோடி ஆட்சியில் பழமையான வாழும் மொழி மற்றும் கலாசாரமான தமிழின் பெருமையை உலகம் முழுவதும் பரப்பும் பணி நடந்து வருகிறது. இது இந்தியாவிற்கும்



இலங்கைக்கும் இடையிலான பல்லாயிரம் ஆண்டு பழமையான கலாசார மற்றும் நாகரீக தொடர்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது, என தெரிவித்துள்ளார்.

# கண்டி-மஹியங்கனை வீதியில் கற்பாறைகள் விழும் அபாயம்

(எம்.ஏ.அமீனுல்லா)

கண்டி- மஹியங்கனை பிரதான வீதியின் 18ஆவது வளைவுப் பகுதியில் கற் பாறைகள் விழும் அபாயம் உள்ளதால் போக்குவரத்தினை மேற்கொள்பவர்கள் மிகவும் அவதானமாக செல்லுமாறு கண்டி மாவட்ட செயலாளர் இந்திக்க உடவத்த எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு (18) முதல் பெய்து வரும் தொடர் மழையினால் கஹட்ட கொல்ல உட்பட பல இடங்களில் பாறைகள் சரிந்து வீழ்ந்துள்ளமையினால் குறித்த வீதியைப் பயன்படுத்துவது அபாயகரமானது எனவும் அவர் தெரிவித்தார்.

தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கண்டி மாவட்ட உதவிப் பணிப்பாளர் இந்திக ரணவீர தலைமையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் வீதியில் உள்ள ஆபத்தான இடங்களை சீர் செய்த போதிலும் மழை குறையாததால் மண்சரிவு மற்றும் பாறைகள் விழும் அபாயம் மீண்டும் ஏற்பட்டுள்ளதாக அதேவேளை, குறித்த வழியால் பயணிப்போர் மாற்று வழிகளை பயன்படுத்துமாறு மாவட்ட செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# "ஹரக் கட்டாவின்" நெருங்கிய சகா கைது

### 280 மில்லியன் ரூபாய் பணம் மீட்பு

குருநாகலில் உள்ள ஒரு வீட்டில் கண்டுபிடிக்கப்பட்ட ரூ.280 மில்லியன் பணத்துடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபர் "ரன் மல்லி" என பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர். இவர் தப்பியோடிய குற்றவாளியும் பிரபல போதைப்பொருள் கடத்தல்காரருமான "ஹரக் கட்டாவின்" நெருங்கிய கூட்டாளியும் ஆவார். போதைப்பொருள் கடத்தலில் இருந்து கிடைத்த வருமானம் என்று நம்பப்படும் இந்தப் பணம், மடகாஸ்கரில் இரத்தினக் கற்களை வாங்குவதில் தொடர்புடைய பணமோசடி நடவடிக்கையில் பயன்படுத்த நோக்கம் கொண்டதாக பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. இலங்கையில் போதைப்பொருள் கடத்தல்காரரிடமிருந்து இதுவரை பறிமுதல் செய்யப்பட்ட மிகப்பெரிய தொகை இதுவாகும். வெளிநாட்டில் மறைந்திருப்பதாகக் கூறப்படும் ரன் மல்லியைக் கைது செய்வதற்கான முயற்சிகள் நடந்து வரும் நிலையில், இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டமை ஒரு முக்கிய நடவடிக்கையாக பொலிஸார் கருதுகின்றனர். போதைப்பொருள் வர்த்தகத்துடனான மேலும் பல தொடர்புகளைக் கண்டறிய விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.




கண்டி இந்து மகளிர் சங்கம் ஏற்பாடு செய்த தைப்பொங்கல் விழா கண்டி சஹஸ் உயனையில் (18) இடம்பெற்றது. இதன்போது கண்டி உதவி இந்தியத் தூதுவர் வி.எஸ்.சரண்யா மங்கள விளக்கேற்றுவதையும் மத்திய மாகாண முன்னாள் பிரதி கல்விப்பணிப்பாளர் திருமதி இராமநாதன், முன்னாள் கம்பளை வலய கல்விப்பணிப்பாளர் திருமதி முருகேசு ஆகியோர் கௌரவிக்கப்படுவதையும், படங்களில் காணலாம்.

# விஜித் விஜயமுனி சொய்சா கைது

முன்னாள் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா வலான மத்திய ஊழல் ஒழிப்பு பிரிவினரால் நேற்று (19) கைது செய்யப்பட்டுள்ளார். சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட வாகன உதிரிப்பாகங்களைப் பயன்படுத்தி வாகனத்தை ஒன்று சேர்த்ததோடு, அதற்காக போலி ஆவணங்களைத் தயாரித்த குற்றச்சாட்டின் பேரில் இந்தக் கைது இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அதற்கமைய, கைது செய்யப்பட்ட விஜித் விஜயமுனி சொய்சா இன்று (20) பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளார்.

முன்னாள் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா, இதே போன்று சட்டவிரோதமான முறையில் வேறு வாகனங்களை தயாரித்து பயன்படுத்தியுள்ளாரா என்பது தொடர்பில் வலான மத்திய ஊழல் ஒழிப்பு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். வாக்குமூலம் வழங்குவதற்காக வலான மத்திய ஊழல் ஒழிப்பு பிரிவில் முன்னிலையானபோதே அவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் சுமார் 5 மணித்தியாலத்திற்கும் அதிக நேரம் வாக்குமூலம் பெறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com


## இஸ்ரேல்-ஹமாஸ் யுத்த நிறுத்தம் சமாதானத்தின் திறவுகோலாகட்டும்

காசா போர் முனையில் யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்திருக்கிறது.

இஸ்ரேலும் ஹமாஸ் போராளிகளும் மோதலை தவிர்க்கும் உடன்பாட்டுக்கு வந்திருப்பது ஓரளவு திருப்தி கொள்ள முடிகிறது.

ஓர் ஆண்டுக்கும் மேலாக நீடித்து வந்த போரை நிறுத்துவதற்கான ஒப்பந்தம் சமீபத்தில் இஸ்ரேல் - ஹமாஸ் இடையே எட்டப்பட்டது. இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கடந்த காலங்களிலும், காசா முனையை இலக்கு வைத்த தாக்குதல்களை நிறுத்துவதற்கு இஸ்ரேல் உடன்பட்ட போதும், அது மூர்க்கத்தனமான மோதலிலேயே முடிந்திருக்கிறது.

இந்த உடன்பாட்டின் படி, ஆறு வாரங்கள் சமாதான காலம். கண்காணிப்பு காலம் என்று கூட சொல்லலாம். யார் மீறுகிறார்கள் என்பது, உலகத்தால் கண்காணிக்கப்படுகிறது.

இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு கட்டார், அமெரிக்கா போன்ற நாடுகள் மத்தியஸ்தம் வகிக்கின்றன. காசா பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள், மூச்சு விடுவதற்கான ஒரு சந்தர்ப்பமாக இதனை கொள்ள முடியும். குண்டு வெடிப்புகளும் கந்தக வாடையும் இந்த மக்களின் வாழ்வியலாக மாறிவிட்டது. பதற்றமும் அச்சமும் ஓட்டமும் இடம் பெயர்வும்... இந்த மக்களுக்கு பழக்கப்பட்டு போன வாழ்வாக மாறிவிட்டது. மரணத்தின் வாசலில் நின்று உயிர் வாழும் ஜீவன்கள் இவர்கள்.

இந்த யுத்த நிறுத்தத்திலாவது நிம்மதி கிடைக்குமா என்பது இவர்களது அங்கலாய்ப்பு.

“இந்தபோர் நிறுத்தம் உண்மையானது என்று நாங்கள் நம்புகிறோம். நாங்கள் எங்கள் வீடுகளுக்குத் திரும்ப வேண்டும். அங்கு சென்று எங்கள் குடும்பத்தினர், நண்பர்களை காணவேண்டும். நிம்மதியாக வாழ வேண்டும் என்பதுதான் எங்கள் ஆசை” என்று இந்தப் பிரதேசத்தின் வாசி ஒருவர் கூறுகிறார். இதுதான் இவர்களது எதிர்பார்ப்பு.

2023-ம் ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலுக்குள் நுழைந்த ஹமாஸ் தீவிரவாதிகள் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் சுமார் 1,200 பேர் கொல்லப்பட்டனர். 251 பேர் பணய கைதிகளாக பிடிக்கப்பட்டனர். இதையடுத்து, ஹமாஸ் அமைப்புக்கு எதிராக இஸ்ரேல் இராணுவ நடவடிக்கையை எடுத்தது. இதில், காசாவில் இதுவரைக்கும் 47,000 க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. காசாவை மையமாகக் கொண்டு வாழ்கின்ற 23 இலட்சம் மக்களில், சுமார் 75 வீதமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். சொத்துக்களின் சேதங்கள், கட்டட அழிவுகள் தொடர்பில் முழுமையான கணிப்பீடுகள் அறிவிக்கப்படவில்லை.

இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் முதல் கட்டமாக ஆறு வார காலத்தில் குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் உட்பட 33 பணயக் கைதிகள், ஹமாஸால் விடுவிக்கப்படுவார்கள். இதற்கு ஈடாக இஸ்ரேல் சிறையில் உள்ள பலஸ்தீன கைதிகள் விடுவிக்கப்படுவார்கள். காசாவின் மக்கள் தொகை மிகுந்த பகுதிகளில் இருந்து இஸ்ரேல் படைகள் கிழக்கு நோக்கி பின்வாங்கும். காசா மக்கள் தங்களின் வீடுகளுக்கு திரும்புவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

அமெரிக்கா, கட்டார் ஆகிய நாடுகள் மத்தியஸ்தம் செய்து இருதரப்பு பேச்சுவார்த்தைகள் நீண்ட காலமாக நடைபெற்றது. இந்த நிலையில் இஸ்ரேல்-ஹமாஸ் இடையிலான போர் நிறுத்தம் அமுக்கு வந்துள்ளது.

அமெரிக்காவின் ஜனாதிபதியாக டொனால்ட் டிரம்ப் இன்று (20/01/2025) பதவி ஏற்கிறார். இவர் இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் விடுத்த எச்சரிக்கை உலகத்தின் கவனத்தை ஈர்த்தது. “நான் ஜனாதிபதியாக பதவியேற்பதற்கு முன்பு போர் நிறுத்தத்தை செய்து கொள்ளுங்கள். தவறினால், இருதரப்பையும் நரகத்துக்கு கொண்டு செல்வேன்..” என்ற கடுமையான எச்சரிக்கையை அவர் கொடுத்தார்.

பலஸ்தீனத்தின் காசா பிரதேசத்தில் கொண்டுவரப்பட்டுள்ள யுத்த நிறுத்தம், டொனால்ட் டிரம்பின் எச்சரிக்கையின் பிரதிபலன் என்று ஈரானிய ஊடகங்கள் செய்து வெளியிட்டு இருக்கின்றன. அதே நேரம், யுத்த நிறுத்தம் ஹமாஸ் இயக்கத்துக்கு பாரிய வெற்றி என்றும் அந்த ஊடகங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். வெற்றி தோல்வி அல்ல இங்கே பிரச்சினை. மனிதாபிமானம் வெல்லப்பட வேண்டும். மனித உயிர்கள் காக்கப்பட வேண்டும். வெற்றி முரசு கொட்டுவோர், இதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.

என்றாலும், மீறல்கள் இடம்பெறலாம் என்ற எதிர்பார்ப்பு, பலஸ்தீன மக்களிடம் இன்னும் குடிகொண்டு இருக்கிறது. இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹூ தெரிவித்திருக்கும் கருத்து, யுத்த நிறுத்த உடன்படிக்கை மீறப்படும் என்ற சமிக்கையை காட்டுகிறது.

அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், “ஒப்புக்கொண்டபடி விடுவிக்கப்படும் பணயக்கைதிகளின் பட்டியலை பெறும் வரை நாங்கள் கட்டமைப்பை நோக்கி முன்னேற மாட்டோம். ஒப்பந்தத்தின்படி விதிமுறை மீறல்கள் இடம் பெறுமாக இருந்தால், அமெரிக்காவின் துணையோடு மீண்டும் யுத்தத்துக்கு செல்வோம்.” என அறிவித்துள்ளார்.

மக்கள் இன்புற்று இருக்கும் இந்த நேரத்தில், நெத்தன்யாகுவின் அறிவிப்பு பலஸ்தீன மக்கள் மத்தியில் ஒரு அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. யுத்த நிறுத்தம் என்பது பம்மாத்துக்கு செய்யப்படுவது அல்ல என்பதை இரு தரப்பும் புரிந்து கொள்ள வேண்டும் அப்பாவி மக்களின் உயிர்களை கேடயங்களாக பயன்படுத்துவதை இஸ்ரேல் தரப்பும் ஹமாஸ் தரப்பும் நிறுத்திக் கொள்வது தான் நீண்ட சமாதானத்துக்கான திறவுகோலாக அமையும்.

## இன்னுமொரு கோட்டாவா அநுர?





‘பேச்சு பல்லாக்கு தம்பி கால்நடை’ தமிழில் ஒரு பழமொழி உண்டு. சோற்றுக்கே வழியில்லாத ஒருவர் தான் கோடீஸ்வரர் என்ற மாதிரி பாவனை பண்ணிக்கொண்டு திரிபவர்களை பார்த்து மேற்குறித்த பழமொழியினை சொல்வதுண்டு. இந்த பழமொழி அநுரகுமாரவுக்கும், அவரது அரசாங்கத்திற்கும் மிகப்பொருத்தமாக இருக்கின்றது. கோட்டோ கோ ஹோம் சென்றதும் அவரது ஆட்சிக்காலத்தை நிரப்ப வந்த டம்மி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்ற மேற்குலகின் செல்லப்பிள்ளை மேற்குலகின் தாளத்திற்கு ஆடி ஐரோப்பிய ஒன்றியத்திடம் நிபந்தனையற்று காலில் விழுந்து கடனை அள்ளி எடுத்து நிதிப்பாய்ச்சலை நாட்டில் ஏற்படுத்தினார். கோட்டா வீடு செல்லும் வரை காத்திருந்த எண்ணெய் கப்பல்கள் ரணில் வந்தவுடன் கொழும்பு துறைமுகத்தை தரிசித்தன.

கியூ–ஆர் வந்தது, கேஸ் வந்தது ரணில் என்ற மேற்குலகின் ‘மெஜிக்மேன்’ நாட்டை அதல பாதாளத்தில் இருந்து மீட்டெடுத்தார் என்ற ரணில் தேர்தல் விளம்பரத்தில் சொன்ன கதை முடிந்து புதிய கதை அநுர ஆட்சிக்கு வந்த பின்னர் ஆரம்பித்திருக்கின்றது.

‘மகிந்த அப்பச்சி’ என்ற நவீன துட்டகைமுனுவின் குடும்பமே ஆட்சியிலிருந்து விரட்டப்பட்டு ஏனையவர்கள் யாவரும் ‘திருடர்’ என முத்திரை குத்தப்பட்டு பாராளுமன்றம் ‘ஹார்ப்பிக்’ இல்லாமல் வாக்குகள் மூலம் சுத்தப்படுத்தப்பட்டு புதிய ஆட்சி வந்து சரியாக மூன்று மாதங்கள் ஆவதற்கு முன்னரே இந்த ஆட்சி பிசுபிசுக்க தொடங்கியிருப்பது பலரும் அறிந்த உண்மை.

பேச்சின் மூலம் பல்லக்கில் பயணிப்பவரே அநுர என்ற அனுபவமற்ற மாலுமி. மக்கள் அநுர மீது அளவுகடந்த நம்பிக்கை கொண்டிருந்த போதே அரசியல் அறிந்தவர்கள் பயப்படத்தொடங்கியிருந்தனர் என்பது மறுக்கொணா உண்மை. வேறு தெரிவுகளற்று மக்கள் மலை போல் நம்பி தெரிவு செய்த அரசாங்கம் பயணிக்கும் பாதை சரியானதாக தெரியவில்லை. உலகத்தின் திசை வழியை உணராதவராகவும், இராஜதந்திர நகர்வுகளை புரியாதவராகவும் இன்னுமொரு கோட்டாவாகவே அனுர தென்படுகின்றார். கோட்டோ எல்லாவற்றிற்கும் அண்ணனை (மகிந்த) நம்பியிருந்தார். அநுர தனது கலாநிதிகளை நம்பியிருக்கின்றார் என்பது வெள்ளிடைமலை.

அநுர ஆட்சிக்கு ஒரு மாத காலத்திற்குள்ளே அறுகம்பையில் குண்டுத்தாக்குதல் இடம்பெறலாம் என்ற கதை பரப்பப்பட்ட போதே அநுர சர்வதேசத்தின் மாயவலையை புரிந்திருக்க வேண்டும். விஜித ஹேரத் உள்ளிட்டவர்களின் கதைகளை அநுர கேட்கும் வரை அவர் நவீன கோட்டா என்பதை சொல்லித்தெரிய வேண்டியதில்லை. அழகான நாடு வளமான வாழ்க்கை என்று தெருத்தெருவாய் போஸ்டர் அடித்து வீதி வீதியாய் பிரசாரம் செய்த அநுர நூற்றுக்கணக்கான வாக்குறுதிகளை அள்ளி வீசியிருந்தார்.

ரணில், சஜித், மகிந்த உள்ளிட்ட பலரையும் எள்ளி நகையாடி தமிழ் நாட்டின் சீமான் பாணியில் மணித்தியாலக்கணக்கில் பேசிய அநுரவுக்கு ஆட்சிக்கு வந்த மூன்று மாத காலப்பகுதியிலும் நாட்டை கொண்டு செல்ல முடியவில்லை. அவர் இதனை பல விடயங்கள் மூலம் உணர்த்தியிருக்கின்றார். நாட்டில் ஏற்பட்ட தேங்காய் தட்டுப்பாடு, அரிசித்தட்டுப்பாடு, பொங்கலுக்கு பச்சரிசி தட்டுப்பாடு, அரிசி மாபியாக்களின் அத்துமீறிய செயற்பாடுகளை கட்டுப்படுத்த முடியாமை, நெல்லுக்கான கட்டுப்பாட்டு விலையினை அறிவிக்காமை, அளவு மீறி உயரும் பொருட்களின் விலைகளை குறைக்காமை, மின்சார கட்டணத்தின் அளவை குறைக்காமை, எரிபொருள் விலை குறைப்பு உள்ளிட்ட அவசரமாக செய்யப்பட கூடிய வேலைகளை கூட அநுர செய்யாமல் காலத்தை இழுத்தடிப்பது அவரின் மீதான நம்பிக்கை மக்கள் மத்தியில் இல்லாமல் செய்திருக்கின்றது.

இனப்பிரச்சினை, வேலைவாய்ப்பு உள்ளிட்ட நீண்டகால பிரச்சினைகளை மூன்று மாத காலப்பகுதிக்குள் தீர்க்க முடியாது ஆயினும் மேற்குறித்த சிறு பிரச்சினைகளை கூட அநுரவாலும், அவரது அமைச்சரவையாலும் தீர்க்க முடியவில்லை என்பது கண்கூடு.

இடது சாரிய பின்புலத்தை கொண்ட அநுரவின் ஆட்சி மக்கள் விரும்பிய ஆட்சி எனினும், அவர் மக்களின் நலனுக்காக ஆட்சி புரியவில்லை என்பதே பலரதும் ஆதங்கமாக இருக்கின்றது.

சீனாவின் கால்களில் விழுந்து பயணிக்க தொடங்கியதிலிருந்து புரிந்துகொள்ள முடிகின்றது. சீனத்தூதரகத்தின் தாளத்திற்கு இசைந்து அநுர அரசாங்கம் செய்யும் நடவடிக்கைகள் அதிகரிக்க தொடங்கியிருக்கின்றது. தாய்வானை தவிர்த்த ‘ஒரே சீனா’ என்ற கொள்கையினை முழுமையாக ஏற்ற அநுர அரசு சீனத்தூதரகத்தின் வலைகளை அரச இயந்திரம் மூலம் மீனவர்களுக்கு விநியோகிக்கும் பணியினை முன்னெடுக்கின்றது. இந்திய மீனவர்கள் விவகாரத்திலும் இந்தியாவை சினப்படுத்தும் படியாக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரனும் கருத்து வெளியிட்டு வருகின்றமை அவ்வளவிற்கு நல்லதாக தெரியவில்லை.

இந்தியா என்பது வெறுமனே ஒரு பெரிய நாடு என்பதை காட்டிலும் இந்தியா பல வகையிலும் இலங்கையின் உருவாக்கத்தில் செல்வாக்கு செலுத்தியுள்ள நாடு என்பதை விஜயனின் வருகையிலிருந்து சிங்கள இனத்தின் உருவாக்கம், சிங்கள மொழியின் உருவாக்கம், புத்திரின் வருகை, இந்தியாவிலிருந்து இறக்குமதியான பௌத்த மதத்தின் பரவுகை என்பன இலங்கையின் உருவாக்கத்தில் இந்தியா செல்வாக்கு செலுத்தியுள்ளதை உணர முடியும்.

தனது ஆட்சியின் வீழ்ச்சியிலும், தனது சகோதரன் தலைமையிலான தமது கட்சியின் ஆட்சியின் வீழ்ச்சியிலும் இந்தியா முழுமையான செல்வாக்கு செலுத்தியுள்ளது என்பதை பகிரங்கமாக கூறிவரும் மகிந்த புரிந்த கொண்டதை அநுர புரியாமல் இருப்பது சிறுபிள்ளைத்தனமானது. கோட்டாவினை வீட்டிற்கு துரத்தியதில் விவசாயிகள் ஆரம்பித்த போராட்டமே அதிக செல்வாக்கு செலுத்தியது என்பதை தற்போதைய அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானது. விவசாயிகள் பிரச்சினை, மீனவர்கள் பிரச்சினை என ஒட்டுமொத்த மக்களின் பிரச்சினைகளை தான் இந்திரஜால வித்தைக்காரர் அல்ல என சொல்லும் அநுர தீர்த்தாக வேண்டும் என்பது அவரின் மேல் போடப்பட்ட சுமை இல்லையெனின் அவரின் மக்களால் துரத்தப்பட வேண்டிய சுமையாகி விடுவார் என்பதை காலம் நிரூபித்துவிடும்.

கோட்டா, ஷேக் ஹசீனா, ஜஸ்ரின் ட்ரூடோ உள்ளிட்டவர்களின் பாடங்களை படித்து அநுர போர்க்கால நடவடிக்கைகளில் தாமதிக்காமல் இறங்க வேண்டும். இல்லாமல் கோட்டா சுவர்களில் படம் வரைந்து விளையாடியதை போன்று கிளீன் சிறீலங்கா என்று கால்வாய்களையும், கடற்கரைகளையும் துப்பரவாக்கி உள்ளூராட்சி மன்றங்கள் செய்ய வேண்டிய வேலைகளை செய்து காலத்தை போக்கினால் காலம் விளையாட ஆரம்பிக்கும் என்பது இயற்கை சொல்லும் பாடம்.

‘சொல்வதை போல் செய்வது எளிதல்ல’ என்ற உண்மையை உணர வைத்திருக்கும் அநுர நாடுகளை கையாள்வதும் பொருளாதாரத்தை மேம்படுத்த உடனடி பரிகாரங்களை மேற்கொள்வது தான் நாட்டை மீட்க செய்யக்கூடிய தற்போதைய வழி. இல்லாவிட்டால் அநுர ரணில் சொல்வதை போல அனுபவமற்ற மாலுமி ஆகிவிடுவார்.

அநுர கோட்டாவின் தோல்வியிலிருந்து பாடம் படிக்காதவர் என்பதை இந்தியாவை கோப்படுத்தி செய்யும் வேலைகளிலிருந்து புரிகின்றது. மகிந்த செய்ததை போன்று தனது சித்தாந்தத்திற்கு நெருக்கமான

> ‘மகிந்த அப்பச்சி’ என்ற நவீன துட்டகைமுனுவின் குடும்பமே ஆட்சியிலிருந்து விரட்டப்பட்டு ஏனையவர்கள் யாவரும் ‘திருடர்’ என முத்திரை குத்தப்பட்டு பாராளுமன்றம் ‘ஹார்ப்பிக்’ இல்லாமல் வாக்குகள் மூலம் சுத்தப்படுத்தப்பட் டு புதிய ஆட்சி வந்து சரியாக மூன்று மாதங்கள் ஆவதற்கு முன்னரே இந்த ஆட்சி பிசுபிசுக்க தொடங்கியிருப்பது பலரும் அறிந்த உண்மை.





ச. திருச்செந்தூரன்
திருகோணமலை

# யாழ்.குருநகர் பகுதியில்

# பலத்த காற்று: வீடுகள் ஆலயம் சேதம்



(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணம் குருநகரில் நேற்று (19) காலை வீசிய பலத்த காற்றினால் பாதிக்கப்பட்ட வீடுகள் மற்றும் தேவாலயத்தை அமைச்சர் சந்திரசேகரன் நேரில் சென்று பார்வையிட்டார்.

இந்த அனர்த்தத்தால் முப்பதுக்கும் மேற்பட்ட வீடுகள் பகுதி அளவிலும் புனித கொலை விலக்கி மாதா ஆலய திருப்பண்ட அறைகள் முற்றாகவும் சேதமடைந்துள்ளன. அத்தோடு சில படகுகளும் பகுதி அளவில் சேதமாக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தேவையான ஏற்பாடுகளை செய்வதற்கு தயாராக உள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கத்தின் மறைவு எமது சமூகத்துக்குப் பேரிழப்பாகும்

## வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன்



ம.சண்முகலிங்கம்

ஈழத்து தமிழ் நவீன நாடக உலகின் தாய் என்று வர்ணிக்கப் படுகின்ற கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கத்தின் இழப்பு எமது சமூகத் துக்குப் பேரிழப்பாகும். ஈழத்தமிழ் நாடகத்தின் வளர்ச்சியில் ஆற்றிய அளப்பரிய பங்களிப்புக்கள் மறக்கப்பட முடியாதவை என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களின் ஊடக அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

மேலும் அவ்வறிக்கையில்,

ஒரு நடிகராக, எழுத்துருவா ளராக, நெறியாளராக, அரங்க அமைப்பாளராக, அரங்க விரிவு ரையாளராக, அரங்க நூல் மொழிபெயர்ப்பாளராக, அரங்க வளவாளராக பல்வேறு பரிணா மங்க ளில் அவர் எமது சமூகத் துக்காக தனது வாழ்வை அர்ப்ப ணித்திருக்கின்றார்.

அவர் தனது நாடக எழுத்துருக் கள் சமூகத்தில் நிலவும் பல்வேறு வகையான பிரச்சினைகளையும், முரண்பாடுகளையும் அடிநாதமாகக் கொண்டு பல்வேறு அவசியமான கேள்விகளை சமூகத்தை நோக்கி எழுப்புபவையாக அமைத் திருந்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் சரி, கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பிரிவி லும் நாடகமும் அரங் கியலும் என்ற ஒரு பாடம் உருவாகுவதற்கு அடிநாதமாக அமைந் தவர் சண்முகலிங்கன் என்றால் மிகையாகாது.

அரங்கப்பயிற்சிகளில் அவர் கூறும் முக்கியமானதொரு விடயம் 'நாடகத்தின் முதற்பணி நல்ல நடிகர்களை உருவாக்குவதல்ல. நல்ல மனிதர்களை உருவாக் குவதே'. அப்படிப்பட்ட ஒரு நல்ல மனிதரை இன்று எமது சமூகம் இழந்து தவிக்கின்றது.

அவரது பிரிவால் துயருற்றுள்ள குடும்பத்தினருக்கும், உறவினர்க ளுக்கும் எனது ஆழ்ந்த இரங் கல்கள் என்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# தந்தை செல்வா கலையரங்க அறக்கட்டளையின் ஆலோசகர் சபைக் கூட்டமும் கலந்துரையாடலும்

(ஏ.எச்.ஏ.ஹுஸைன்)

யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்க அறக்கட்டளையின் ஆலோசகர் சபைக் கூட்டமும் கலந்துரையாடலும் அதன் நம்பிக்கையாளர் சபை பிரதம அறங்காவலர் எஸ்.சி.சி. இளங்கோவன் தலைமையில் தந்தை செல்வா கலையரங்கில் சனிக்கிழமையன்று (18) நடைபெற்றது.

தந்தை செல்வா அறக்கட்ட ளையின் நம்பிக்கையாளர் சபை செயற்பாட்டாளர் எஸ்.திலீபனின் இணைப்பாக்கத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முதன்மை அறங் காவலர் ஆர்.பேரின்பநாயகம், அறங்காவலர் ஆர்.செல்வின், அம்பாறையிலிருந்து ஆலோ சகர் கே.நிர்மலரூபன், மட்டக்களப் பிலிருந்து ஏ.எச்.ஏ.ஹுஸை ன் உட்பட இன்னும் அதன் அறங்காவலர் உறுப்பினர்களும் அங்கத்தவர்களும் செயற்பாட் டாளர்களும் கலந்து கொண்டனர்.

இந்த ஆலோசனைக் கலந்துரையாடல் நிகழ்வில் தந்தை செல்வா கலையரங்க அறக்கட்டளையினால் முன்னெ டுக்கப்பட்டுவரும் சமூக சேவைச் செயற்பாடுகள், அதன் எதிர்காலச் செயற் திட்டங்கள் குறித்து விவரம் தெரிவிக்கப்பட்டு கலந்துரையாடப் பட்டது.

தந்தை செல்வா அறக்கட்டளை



மூலம் அறிவுசார் கல்வி, சமா தானம், பாதிக்கப்பட்ட மக்களின் கலை கலாசார பண்பாட்டு மீட்சி, சமாதான எண்ணக்கருக் களை விதைத்தல் உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகள் முன் னெடுக்கப்பட்டு வருவதாகம் தொடர்ந்தும் இத்தகைய சமூக அபிவிருத்தி செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக சமாதான எண்ணக் கரு குறித்து தனிமனித செயற்பாடும் அடுத்த தலைமுறையினருக்கு சமாதானத்தை நோக்கிய அகன்ற பார்வையைக் கொண்டு சேர்ப்பித்தலும் இடம்பெறவேண்டும். இந்த செயற்திட்டத்திற்கு அர்ப்ப ணிப்பதாக அறக்கட்ட ளையின் எதிர்கால செயற்பாடுகள் முனைப்புப் பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தந்தை செல்வா கலைய ரங்கத்தின் முன்னேற்றங்கள் பற்றிய விவரணத்தை அவ் அறக்கட்டளையின் அலுவலர் எஸ். கமல், கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையை ஜே. டிலோஜினி, கிளிநொச்சியில் அமையப் பெற்றுள்ள சமாதான சகவாழ்வுக் கலையரங்கத்தின் செயற்பாடுகள்பற்றி எஸ். திலீபன் எம்.யாழினி ஆகியோர் விரிவாக எடுத்துரைத்தனர்

தந்தை செல்வா கலையரங்கு தந்தை செல்வா அவர்களின் நினைவாகவும் யுத்தத்திலிருந்து மீண்டெழும் தமிழ் பேசும் மக்களின் வல்லமையின் எடுத்துக் காட்டாகவும் தந்தை செல்வா அறக்கட்டளையின் தாராள பங்களிப்புடனும் 2019 ஜனவரி 7ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

அன்று தொடக்கம் இன்றுவரை தந்தை செல்வா அறக்கட்ளை பல்லின சகவாழ்வு, சமாதான நடவடிக்கைகளுக்காக இயங்கி வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

## வவுனியா நெளுக்குளத்தில்

# 12 வாகன பற்றரிகளுடன் ஒருவர் கைது

(கி.வசந்தன்)

வவுனியா, நெளுக்குளம் பகுதியில் 12 வாகன பற்றரிகளை மகேந்திரா ரக வாகனத்தில் ஏற்றிச் சென்ற ஒருவரை கைது செய்துள்ளதுடன், வாகனத்தையும் கைப்பற்றியுள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நெளுக்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி.எம்.பி.ஆர்.கே.திவுல்வெவ அவர்களின் தலைமையிலான பொலிஸ் குழுவினர் கடந்த சனிக்கிழமை (18) நெளுக்குளம் பகுதியில் திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.



இதன் போதே குறித்த மகேந்திரா ரக வாகனத்தினை சோதனைக்குட்படுத்திய போது வாகனத்தில் 12 வாகன பற்றரிகளை மீட்டெடுத்துள்ளனர். இதனையடுத்து குறித்த வாகன பற்றிகளை ஏற்றிச்சென்ற வாகனத்தின் சாரதியை கைது செய்ததுடன், அவ் வாகனத்தினையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

வாகன உரிமையாளர்கள் பற்றிரிகள் எவையும் களவாடப்பட்டுள்ளமை தொடர்பில் உடனடியாக நெளுக்குளம் பொலிஸ் நிலையத்திலோ அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திலோ முறைப்பாட்டினை வழங்குமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த நான்கு வாரத்திற்கு முன்னர் வவுனியா, நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள வாகன தரிப்பிடம் ஒன்றில வாகன பற்றரிகளை களவாடிய குற்றச்சாட்டில் நான்கு வாகன பற்றரிகளுடன் இருவரை நெளுக்குளம் பொலிஸார் கைது செய்தமையும் குறிப்பிடத்தக்கது.



காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடாத்தும் சற்குரு ஸ்ரீதியாகராஜ சுவாமிகளின் இசை ஆராதனை விழா கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் நடைபெற்றது.

# திக்கம் வடிசாலை தைப்பூச நன்னாளில் இயங்க ஆரம்பிக்கும்



(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணம் – வடமராட்சி திக்கம் வடிசாலை எதிர்வரும் தைப்பூச நாளிலிருந்து இயங்கும் என பனை அபிவிருத்தி சபை தலைவர் திரு.சகாதேவன் மற்றும் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் சந்திரசேகரன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இறுதியாக பனை அபிவிருத்தி சபை தலைவராகவிருந்த பெரும்பானமை இனத்தை சேர்ந்த நபர் பல கோடி ரூபா பணத்தை கையூட்டாக பெற்று தனியார் நிறுவனம் ஒன்றிற்கு 25 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கியுள்ளதாகவும், அக் குத்தகையையும் அமைச்சரவை பத்திரம் ஊடக இரத்து செய்யவுள்ளதாகவும், பனை அபிவிருத்தி சபை இவ்வாண்டு முதல் பனை தென்னை வள அபிவிருத்தி சங்கங்களிடம் கையளிக்கப்படும் எனவும் அங்கு இடம் பெற்ற ஊழல்களுக்கு எதிராக நடவடிக்கை ஏடுக்கப்படும் ஏனவும் அங்கு உரை நிகழ்த்திய கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் சந்திரசேகரன் மேலும் தெரிவித்தார்.

திக்கம் வடிசாலையை மீள இயங்குவது தொடர்பான கலந்துரைடால் திக்கம் வடிசாலையில், பனை தென்னை வள கூட்டுறவு சங்க கொத்தணியின் தலைவர் தலமையில் நேற்றையதினம் (18) இடம்பெற்றது.

இதில், கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் பிரதீப் சுந்தரலிங்கம், யாழப்பாண மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன், வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளரும் பதிவாளருமான திரு.திருலிங்கநாதன்,

யாழ். மாவட்டத்தில் உள்ள ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் சமாச தலைவர்கள், பொதுமுகாமையாளர், பிரதிநிதிகள், வலிகாமம், வடமராட்சி தென்மராட்சி ஆகிய கொத்தணிகளின் தலைவர்வர்கள், பொதுமுகாமையாளர்கள், நிர்வாக உறுப்பினர்கள், அனைத்து பனை தென்னை கூட்டுறவு சங்களினது தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், திக்கம் வரணி வடிசாலை தலைவர் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# தேவைப்பட்டால் மீண்டும் போரை தொடங்குவோம்

**- பெஞ்சமின் நெதன்யாஹு**



இஸ்ரேல் – ஹமாஸ் இடையிலான போரை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் கைச்சாத்தான போர் நிறுத்த ஒப்பந்தம் நேற்று அமுலாகவிருந்த நிலையில், போர் நிறுத்த ஒப்பந்தத்தில் விதிமீறல் இருந்தால், அதை இஸ்ரேல் சகித்துக் கொள்ளாது என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், “ஒப்புக்கொண்டபடி விடுவிக்கப்படும் பணயக் கைதிகளின் பட்டியலை பெறும் வரை நாங்கள் போர் நிறுத்த கட்டமைப்பை நோக்கி முன்னேற முடியாது. போர் நிறுத்த ஒப்பந்தத்தில் விதிமீறல்களை இஸ்ரேல் பொறுத்துக்கொள்ளாது. ஹமாஸ் மட்டுமே பொறுப்பு. தேவைப்பட்டால் அமெரிக்காவின் ஆதரவோடு போரை மீண்டும் தொடங்க எங்களுக்கு அனைத்து உரிமைகளும் உள்ளது,” என்று குறிப்பிட்டுள்ளார்.

நீண்ட ஆலோசனைக்குப் பிறகு காஸாவில் போர் நிறுத்த ஒப்பந்தம் மற்றும் பணய கைதிகளை விடுவிப்பதற்கான ஒப்பந்தத்திற்கு இஸ்ரேலிய அமைச்சரவை அனுமதியளித்தது. இதன் மூலம் வருகின்ற நேற்று முதல் முதற்கட்டமாக போர் நிறுத்த நடவடிக்கைகள் அமுலாகியது.

இஸ்ரேல் பிரதமரின் அலுவலகம், ஜனவரி 17 அன்று காலை வெளியிட்ட அறிக்கையில், “பணயக் கைதிகளை விடுவிப்பதற்கான” ஒப்பந்தத்திற்கு அனுமதியளிப்பதாக குறிப்பிட்டிருந்தது. பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டிருக்கும் இஸ்ரேலியர்களின் குடும்பத்தினருக்கும் இத்தகவல்கள் அளிக்கப்பட்டுவிட்டதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

புதன்கிழமையன்று போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்பான அறிவிப்பு வெளியானது. அதன் பிறகும், காஸா மீது இஸ்ரேல் வான்வழி தாக்குதலை நடத்தியது. இதில் 80க்கும் மேலானோர் உயிரிழந்துள்ளனர் என்று ஹமாஸ் நடத்தும் சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.

இந்த தாக்குதலுக்குப் பிறகு போர் நிறுத்தம் தொடர்பான வாக்களிப்பு தாமதப்படுத்தப்பட்டது. வியாழன் அன்று அமைச்சரவை கூட்டம் நடைபெறுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு, ‘இறுதி நிமிடத்தில் சலுகைகளை பெற ஹமாஸ் முயற்சி செய்கிறது,’ என்று நெதன்யாகு குற்றம் சாட்டினார்.

ஒப்பந்தத்தின் அனைத்து அம்சங்களையும் ஹமாஸ் ஏற்றுக் கொள்ளும் வரை அமைச்ச ரவையை இஸ்ரேலிய அரசு கூட்டாது என்றும் நெதன்யாகு அறிக்கை வெளியிட்டிருந்தார்.

ஒப்பந்தத்தின் முதல் ஆறு வாரத்தில், இஸ்ரேலிய சிறைகளில் உள்ள பாலத்தீன கைதிகளை வெளிவிடுவதற்கு மாற்றாக, பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் உட்பட 33 பணயக்கைதிகள் விடுவிக்கப்படுவார்கள்.

காஸாவின் மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் இருந்து, இஸ்ரேலிய துருப்புகள் அங்கிருந்து கிழக்கு நோக்கித் திரும்பும்.

போரால் இடம்பெயர்ந்த பாலத்தீனர்கள் தங்களின் சொந்த ஊர்களில் உள்ள வீடுகளுக்குத் திரும்புவார்கள். மேலும், ஒவ்வொரு நாளும் நிவாரணப் பொருட்களுடன் வரும் நூற்றுக்கணக்கான கனரக வாகனங்கள் காஸாவுக்குள் அனுமதிக்கப்படும்.

இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை, போர் நிறுத்தம் அமலுக்கு வந்த 16-வது நாளில் தொடங்கும். அப்போது, மீதமுள்ள பணயக்கைதிகளை விடுவிப்பது, இஸ்ரேலிய துருப்புகளை திரும்பப் பெறுவது, நிலையான அமைதிக்குத் திரும்புவது தொடர்பான விவகாரங்கள் ஆலோசிக்கப்படும்.

மூன்றாம் மற்றும் இறுதிக்கட்ட போர் நிறுத்த நடவடிக்கைகளின்போது, பணயக்கைதிகளின் உடல்கள் ஏதேனும் திரும்பி வழங்காமல் இருந்தால், அதனை திருப்பி அளிக்கவும், காஸாவின் மீள்கட்டுமானம் குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்த புனரமைப்புப் பணிகள் நடைபெற நீண்ட காலம் ஆகும்.

# தேர்தல்கள் ஆணைக்குழுவின் நிதிச் சுதந்திரமின்மை பாரதூரம்



## ஐரோப்பிய ஒன்றியம் முன்வைப்பதாக பெப்ரல் தெரிவிப்பு

**- எம்.ஏ.அமீனுல்லா**

இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவின் நிதிச் சுதந்திரமின்மையை ஐரோப்பிய ஒன்றியம் பாரதூரமான விடயமாக முன்வைத்துள்ளதாக பெப்ரல் (Paffral) அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

வாக்குச் சீட்டு அச்சடிக்கப்பட்டாலும் அரசு அதற்கான நிதியை ஒத்துக்காததன காரணமாக, உள்ளூராட்சித் தேர்தலை ஆணைக்குழுவினால் நடத்த முடியவில்லை எனவும் அவ்வாறு, ஆணைக்குழுவிற்கு நிதி தொடர்பிலான சுதந்திரம் இருந்திருந்தால் இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டிருக்காது எனவும் அவர் வலியுறுத்தினார்.

கண்டியில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ரோஹன ஹெட்டியாராச்சி, மேலும் கூறுகையில்:

உள்ளூராட்சி மன்றங்களுக்கான 340 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அரசாங்கம் ஏப்ரலில் நடத்தும் எனவும், அதனை அரசாங்கம் ஏதேனும் காரணத்திற்காக ஒத்திவைக்கத் தீர்மானித்தால், நீதிமன்றத் தீர்ப்பை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கு பெப்ரல் (Paffrarel) அமைப்பு பரிந்துரைக்கும் என நம்புகிறேன்.

புதிய வேட்புமனுக்களை அழைப்பதன் மூலம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பில் அனைவரும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதால் ஏப்ரல் மாதத்தில் வாக்குப்பதிவு நடைபெற அதிக வாய்ப்பு இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

உள்ளூராட்சித் தேர்தலை விரைவாக நடத்துவது தொடர்பான உத்தரவை பஃவ்ரல் அமைப்பு முதலில் நீதிமன்றத்தில் பெற்றது. தற்போதுள்ள இந்த வேட்புமனுக்கள் மீது கருத்து கணிப்புகள் நடத்தப்பட்டால், சில திரிபுகள் ஏற்படும் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. இதன் காரணமாக தற்போதுள்ள வேட்புமனுக்களை ரத்து செய்துவிட்டு மீண்டும் வேட்புமனுக்களை கோரி தேர்தலை நடத்த அனைவரும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

புதிய வேட்புமனுக்கள் கோரப்பட்டதன் மூலம் சுமார் 4 1/2 இலட்சம் இளைஞர்கள் வாக்களிக்க வாய்ப்பு ஏற்படும்.

மேலும், 2023இல் இளம் சமுதாயத்தில் உள்ள வேட்பாளர்களுக்கான 25% ஒதுக்கீடு நிறைவேற்றப்பட்டது. அதன் மூலம் இளைஞர்கள் குழு ஒன்று வேட்புமனுக்களை பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இது தொடர்பான வரைவு கடந்த 9ஆம் திகதி பாராளுமன்றத் தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதை சவாலுக்கு உட்படுத்த பொதுமக்களுக்கு இந்த மாதம் 23 ஆம் தேதி வரை 14 நாட்கள் அவகாசம் அளிக்கப்படும்.

இந்த வேட்புமனுக்களை இரத்து செய்யக் கூடாது என யாராவது நினைத்தால், நீதிமன்றத்தை நாடலாம். அதன்படி, வேட்புமனுக்களின் படி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என யாராவது நீதிமன்றத்தில் கோர வாய்ப்பு உள்ளது. 23ஆம் திகதிக்கு பிறகும் எந்த தரப்பினரும் நீதிமன்றத்தை அணுகவில்லை என்றால் இந்த மசோதாவை நாடாளுமன்றத்தில் இரண்டாவது முறையாக நிறைவேற்ற நாடாளுமன்றத்துக்கு வாய்ப்பு கிடைக்கும். மேலும் அவ்வாறு யாராவது நீதிமன்றத்திற்குச் சென்றால், உச்ச நீதிமன்றம் முடிவெடுக்க அதிகபட்சம் 21 நாட்கள் எடுத்துக்கொள்ளலாம்.

வேட்புமனு தாக்கல் செய்வதற்கு 17 நாட்களும், பிரசார நடவடிக்கைகளுக்கு குறைந்தபட்சம் ஐந்து வாரங்களும் அதிகபட்சம் 07 வாரங்களும் கால அவகாசம் வழங்க முடியும்.

வாக்குப்பதிவுக்கான குறைந்தபட்ச நாட்கள் 52 நாட்களாக இருந்தாலும் அதிகபட்ச நாட்களாக 66 நாட்கள் முடியுமாக இருக்கும். எனவும் அதன்படி, நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்படாவிட்டால், ஏப்ரல் முதல் வாரத்தில் தேர்தலை நடத்துவதற்கு எந்தத் தடையும் இல்லை என்று நாங்கள் நம்புகிறோம்.

மேலும், மசோதா நிறைவேற்றப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் வேட்புமனுக்கள் கோரப்பட வேண்டும் என்றும் இந்த மசோதாவில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுவதற்கு இடமில்லை. இதனை நீதிமன்றத்தின் ஊடாக யாராவது சவாலுக்குட்படுத்தினால் சித்திரை புத்தாண்டுக்கு பின்னரே தேர்தல் ஒத்திவைக்கப்படும் வாய்ப்பு உள்ளது.

எவ்வாறாயினும், ஏப்ரல் மாதத்தில் தேர்தலை நடத்துவது தொடர்பில் நாம் நம்பிக்கையுடன் இருக்க முடியும். ஏதாவது ஒரு வகையில் தாமதம் ஏற்பட்டால், பெப்ரல் அமைப்பு மீண்டும் முந்தைய நிலைக்குச் சென்று, நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை செயல்படுத்தும்.

அனைவரும் ஒப்புக்கொண்டதாலும், இதை தேர்தல் ஆணையம் ஏற்கனவே அறிவித்ததாலும் ஏப்ரல் முதல் வாரத்தில் தேர்தலை நடத்தலாம் என நம்புகிறோம்.

தற்போது ஜனாதிபதி தேர்தல் தொடர்பான அறிக்கையை ஐரோப்பிய ஒன்றியம் சமர்ப்பித்துள்ளது. ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் 16 யோசனைகளை முன்வைத்துள்ளனர். பெப்ரல் அமைப்பினருடன் அவர்கள் விசேட கலந்துரையாடலையும் நடத்தினர்.

ஐரோப்பிய ஒன்றியம் பாராட்டும் வகையில் தேர்தலை நடத்த பங்களித்த தேர்தல் ஆணையம், பொலிஸ்துறை, கண்காணிப்பு அமைப்புகள், ஊடகங்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் நன்றி தெரிவிக்க வேண்டும்.

ஐரோப்பிய ஒன்றியம் பாராட்டும் வகையில் இலங்கை தேர்தலை நடத்தி முடித்திருப்பது நல்ல அறிகுறி. ஜனாதிபதித் தேர்தலின் போது அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் எமக்கு பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன.

நீதிமன்றம் சென்றோம். ஆனால், நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில் மக்களும், தேர்தல் ஆணையமும், கண்காணிப்பு அமைப்புகளும், பொலிஸாரும், ஊடகங்களும் இணைந்து இந்நிலையை முற்றிலும் மாற்றினர்.

ஆனால் இன்னும் திருத்தப்பட வேண்டிய விடயங்கள் உள்ளன. வெளிநாடுகளில் வசிக்கும் குடிமக்கள் வாக்களிக்கும் உரிமையை இழந்துள்ளனர். மேலும், நாட்டில் உள்ள ஊடகவியலாளர்கள் உட்பட சுமார் ஒரு மில்லியன் மக்கள் தேர்தல் நாளில் வாக்களிக்க முடியாது. அவர்கள் வாக்களிக்க ஒரு அமைப்பு தயாரிக்கப்பட வேண்டும். மேலும், மாற்றுத்திறனாளி சமூகத்தினருக்கு எளிதாக அணுகும் வசதிகளுடன் வாக்களிக்கும் வாய்ப்பை வழங்க வேண்டும்.

ஐரோப்பிய ஒன்றியம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நிதி சுதந்திரத்தை இலகுபடுத்தவில்லை ஆதலால் வாக்குச் சீட்டுகள் அச்சிடப்பட்ட நிலையில் அரசு பணம் வழங்காததால், உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முடியாமல், தேர்தல் ஆணைக்குழு அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளது. உள்ளூராட்சி தேர்தலை நடத்த தேர்தல் ஆணையத்தால் கூட முடியவில்லை. ஏனெனில் அரசு அதற்கான நிதியை வழங்கவில்லை. இதன் காரணமாக தேர்தல் ஆணையத்தின் நிதி சுதந்திரம் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கைகளில் விசேட கவனம் செலுத்தியுள்ளன.

மேலும் தேர்தல் தொடர்பான நாட்குறிப்பு அவசியம், இலங்கையின் தேர்தல் முறைமையில் இது போன்ற பல திருத்தங்கள் சேர்க்கப்பட உள்ளன.

தற்போதைய அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ள சூழ்நிலையில் அடுத்த நான்கு வருடங்களில் திருத்தப்பட வேண்டிய தேர்தல் முறை மற்றும் தேர்தல் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ள முடியும் என நம்புகின்றோம்.




**ஐரோப்பிய ஒன்றியம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நிதி சுதந்திரத்தை இலகுபடுத்தவில்லை ஆதலால் வாக்குச் சீட்டுகள் அச்சிடப்பட்ட நிலையில் அரசு பணம் வழங்காததால், உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முடியாமல், தேர்தல் ஆணைக்குழு அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளது.**

# ஆரையம்பதி சிவனேஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேகம்







மட்டக்களப்பு ஆரையம்பதி அருள்மிகு சிவனேஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கணேஷ லோகநாத குருக்கள் உட்பட உதவி குருமார்கள் சகிதம் நடைபெற்ற பூஜைகளை தொடர்ந்து

ஆரையம்பதி இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை மாணவிகளின் சிவதாண்டவ நாட்டியமும் தசமங்கல தர்சனம் எஜமான் அபிஷேகம் ஆச்சார்ய சம்பாவனை, குரு ஆசிர்வாதம், விபூதி பிரசாதம் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது.

## உதவி மாவட்ட சாரண ஆணையாளர்களுக்குச் செயலமர்வு





**திகாமடுல்ல நிருபர்**

இலங்கை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் உதவி மாவட்ட சாரண ஆணையாளர்களுக்கான (ஊடகம்) ஒரு நாள் செயலமர்வு கொழும்பு சாரணர் தலைமைக் காரியாலயத்தில் கடந்த சனிக்கிழமை (18) நடைபெற்றது.

பிரதம சாரண ஆணையாளர் சட்டத்தரணி ஜனப்ரித் பெர்னாண்டோவின் வழிகாட்டலின் கீழ் தலைமைக் காரியாலய பிரதி, உதவி ஆணையாளர்களினால் பல்வேறுபட்ட தலைப்புக்களில் நடாத்தப்பட்ட இச்செயலமர்வில் சகல மாவட்டங்களிலிருந்தும் ஊடகத்துக்குப் பொறுப்பான உதவி மாவட்ட ஆண், பெண் சாரண ஆணையாளர்கள் கலந்து கொண்டு பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டனர்.

## சாரணர் சங்கத்தின் தேசிய பொங்கல் விழா

**(ருத்ரா)**

இலங்கை சாரணர் சங்கத்தின் தேசிய பொங்கல் விழா மட்டக்களப்பு காந்தி பூங்காவில் சனிக்கிழமை (18) கொட்டும் மழையில் சாரணர் சங்க மட்டு கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதில் அதிதிகள் அனைவரும் மலர் மாலை அணிவித்து சாரணர் சின்னம் பொறிக்கப்பட்ட கழுத்துப்பட்டி வழங்கி காந்தி பூங்கா வரை சாரணர் மாணவர்களின் கலாசார வாத்திய இசையுடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

இந்த பொங்கல் விழா நிகழ்வில் பிரதம அதிதியாக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே. முரளீதரன், கௌரவ அதிதிகளாக இலங்கை சாரணர் சங்க மட்டக்களப்பு தலைவர் வை.ஜெயசந்திரன்,



சாரணர் பயிற்றுவிப்பாளர் தினேஷ் மானவடு விசேட விருந்தினர்களாக வந்திருந்தனர். சம்பிரதாய பூர்வமாகப் பாரம்பரிய முறையில் பொங்கல் விழா ஆரம்பிக்கப்பட்டு மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றது.மாணவர் மத்தியில் கோலம் போடுவதை ஊக்குவிக்கும் முகமாகக் கோலப் போட்டியும் நடைபெற்றது.

## சட்டவிரோத மோட்டார் சைக்கிள் சாரதிகளுக்கு பொஸார் எச்சரிக்கை





காரைதீவு பிரதேச சபைக்கு உட்பட்ட மாவடிப்பள்ளி பகுதியில் மக்கள் போக்குவரத்துக்கு இடையூறாக மோட்டார் சைக்கிள் ஓடுபவர்கள், மது போதையில் வாகனம் செலுத்துபவர்கள், போக்குவரத்து விதிமுறைகள் மீறி வாகனம் செலுத்துபவர்கள் தலைகவசம் அணியாமல் ஓடுபவர்கள், வாகன அனுமதிப் பத்திரம் இல்லாமல் வாகனம் செலுத்துவோர் உட்படச் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் அதிரடியாகக் கைது செய்யப்படுவர் என காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர். எஸ்.ஜெகத் தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை மாவடிப்பள்ளி ஜும்மா தொழுகையைத் தொடர்ந்து பள்ளிவாசலுக்கு வருகை தந்த அவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

மோட்டார் சைக்கிள்களில் சாகசங்கள் இரவு நேரங்களில் இளைஞர்கள் குழுக்கள் பெரிய சத்தங்களுடன் மோட்டார் சைக்கிள் ஓடுதல், வீதியில் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்குத் தொந்தரவு ஏற்படுத்தல் போன்ற ஆபத்தை விளைவிக்கும் விதமாக மோட்டார் சைக்கிள்களைச் செலுத்துதல் என மோட்டார் சைக்கிள்களில் சாகசங்கள் செய்து மக்களுக்கு இடையூறு விளைவித்து வருகின்றனர்.

மேலும் வீதிகளில் கூடி நிற்கும் வாலிபர்கள் சம்பந்தமாகவும் மற்றும் போதைப்பொருள் பாவனை, போதைப்பொருள் விற்பனை செய்பவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் கடுமையான சட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் மேற்படி நபர்களுக்கு எதிராகப் பள்ளி நிர்வாகத்தால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் பூரண தெளிவினை வழங்கினார்.





திருகோணமலை மாவட்ட நாமகல் அறநெறி பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள் நேற்று அலஸ்தோட்டத்தில் வழங்கி வைக்கப்பட்டன. குறித்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கை தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசான் கலந்து கொண்டு சுமார் 160 மாணவ மாணவிகளுக்கு அப்பியாசக் கொப்பிகளை வழங்கி வைத்தார். **படம் ஹஸ்பர் ஏ.எச்**

## மட்டு.வாவியில் பெண்ணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு நகர் வாவியில் நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் அடையாளம் காணப்படாத பெண் ஒருவரின் சடலம் வெள்ளிக்கிழமை (18) காலை 10.00 மணிக்கு மீட்கப்பட்டுள்ளதாக மட்டு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கல்லடி பாலத்துக்கு அருகாமையிலுள்ள முனிச் விக்டோரியா நட்புறவு வீதியிலுள்ள வாவிக்கரையில், நீரில் மூழ்கிய நிலையில் சடலம் ஒன்று கரை ஒதுங்கிய நிலையில் இருப்பதை கண்டு, பொலிஸாருக்கு பொதுமக்கள் தகவல் வழங்கினர்.

இதையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அத்துடன், சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கோடீஸ்வரன்-கல்முனை சுகாதார பணிப்பாளர் சந்திப்பு



**(றியாஸ் ஆதம்)**

திகாமடுல்ல மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீனை சந்தித்து கல்முனை பிராந்தியத்தில் உள்ள வைத்தியசாலைகளின் அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடினார்.

குறித்த கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை ( கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது. இதன்போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திருக்கோவில் ஆதார வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

திருக்கோவில் வைத்தியசாலையின் பௌதீக வளங்களை மேம்படுத்துவது தொடர்பாகக் கூறிய அவர், வைத்திய சாலைகளின் அபிவிருத்திக்கு தன்னால் முடியுமான ஒத்துழைப்புக்களை வழங்குவதாகவும் வைத்தியர் திருமதி சகீலா இஸ்ஸடீன் குறிப்பிட்டார்.

# கிழக்கு ஆசிரியர் இடமாற்றம் : புதிய விதிக்கோவை அறிமுகம்

(முகம்மட் முக்தார்)

கிழக்கு மாகாணத்திற்கான புதிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கையொன்றை ஆசிரியர் தொழிற்சங்கங்களின் ஒத்துழைப்புடன் தயாரிக்கவுள்ளதாகக் கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர். கே குணநாதன் தெரிவித்தார்.

தற்போது கிழக்கில் நடைமுறையிலுள்ள மாகாண ஆசிரியர் இடமாற்றக் கொள்கை பல்வேறு குறைபாடுகளைக் கொண்டுள்ளதாகப் பல ஆசிரியர் தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் தேசிய இடமாற்றக் கொள்கைக்குப் பிரதிபலிக்க வில்லையெனவும் ஆசிரியர் தொழிற்சங்கங்களின் கருத்துக்களை அறியாது தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் முறையிடப்பட்டதற்கமைய புதிய இடமாற்றக்கொள்கை தயாரிக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார் .

புதிய ஆசிரியர் இடமாற்றக்கொள்கை ஆசிரியர்களை மாவட்டத்தைவிட்டு வெளியே இடமாற்றம் வழங்காதவாறும், ஆசிரியர்களது வயது, குடும்ப பொருளாதார பிரச்சினை, கலாசார நிலைமைகளைக் கருத்தில் கொண்டு ஆசிரியர் மைய இடமாற்றக் கொள்கையாக வடிவமைக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

புதிய ஆசிரியர் இடமாற்றக்கொள்கை தயாரிக்கப்பட்ட பின்னர் கல்வித்துறை சார்ந்தோரின் கருத்துக்களுக்காகப் பகிரங்கப்படுத்தப்பட்டு இறுதியாக்கப்பட்டு ஆளுநரின் அனுமதி பெறப்படுமெனவும் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் 17 கல்வி வலயங்களும், சுமார் 30,000 க்கு மேற்பட்ட மாகாண சேவைக்குரிய இலங்கை ஆசிரியர் சேவை உத்தியோகத்தர்களும் கடமையில் உள்ளனர். இவர்களுள் 20,000 பேர் பெண் ஆசிரியர்களாவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# புதிய வைத்தியர்கள் நியமனம்

முகம்மட் முக்தார்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள வைத்திய சாலைகளில் கடமையாற்றவென புதிய வைத்தியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான சேவை நிலையங்களுக்கான கடிதங்கள் கையளித்தல் மற்றும் அறிமுக நிகழ்வு கடந்த வாரம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

புதிதாகச் சேவையில் இணைந்து கொள்ளப்பட்ட வைத்தியர்கள் மத்திய முகாம், இறக்காமம், நிந்தவூர், மாவடிப்பள்ளி ஆகிய பிரதேச வைத்தியசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கந்தளாய் குளத்தின் மேலும் இரு வான் கதவுகள் திறப்பு; தாழ்நில மக்களுக்கு அபாய எச்சரிக்கை விடுப்பு





(கிண்ணியா கியாஸ் ஷாபி)

கந்தளாய் குளத்தின் பத்து வான் கதவுகளின் கடந்த வாரம் இரண்டு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ள நிலையில், நேற்று (19) மேலும் இரண்டு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

கடந்த வாரம் ஒரு அடி நீரை வெளியேற்றிய அதேவேளை, நேற்று இரண்டு அடி நீரை வெளியேற்றுவதற்காகத் திறக்கப்பட்டுள்ளது.

கந்தளாய் குளத்தின் தற்போதைய மொத்த நீரின் கொள்ளளவு 114,000 ஏக்கர் அடியாகும். தற்போது கந்தளாய் குளத்தில் 104375 கன அடி நீர் உள்ளதால், மேலதிகமான நீரை வெளியேற்றுவதற்காக மேலும் இரண்டு வான் கதவுகள் திறக்கப்பட்டதாக, கந்தளாய் நீர்ப்பாசன பொறியியலாளர் சிந்தக்க சுரவீர தெரிவித்தார்.

தற்போதுள்ள குளத்தின் நீர்மட்டத்தைக் குறைக்க வேண்டிய தேவை ஏற்பட்டதாலும், பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயத்தைத் தடுப்பதற்காகவும், இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக நீர்ப்பாசன பொறியியலாளர் மேலும் தெரிவித்தார்.

குளத்திலிருந்து மேலதிக நீர் வெளியேற்றப்படுகின்றமையினால், குளத்தின் கீழ்ப்பகுதியில் வாழுகின்ற மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு நீர்ப்பாசன திணைக்களத்தினால் மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்

# இஸ்லாமாபாத் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் விழிப்புணர்வு செயலமர்வு



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் "செழுமையான தேசம் அழகான வாழ்வு" என்ற தொனிப் பொருளில் "கிளீன் ஸ்ரீலங்கா" செயற்றிட்டத்தின் கீழ் பாடசாலை ஆளணியினருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான செயலமர்வு அண்மையில் பாடசாலையின் ஆராதனை மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் ஏ.ஜி.எம். றிசாத் தலைமையில் நடைபெற்ற இச் செயலமர்வில் பாடசாலையில் கடமையாற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் எனப் பலரும் பங்கு பற்றினர்.

அக்கறைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வேண்டுகோளின் பெயரில் சின்னம்மா பௌண்டேசன் ஏற்பாட்டில் நேற்று அட்டாளைச்சேனை அந்நூர் மகா வித்தியாலயத்தில் இரத்ததான முகாம் ஒன்று நடைபெற்றது.



# விடுகை விழா



அபு அலா, எஸ்.எம். முபீன்

திருகோணமலை – கோபாலபுரம் பாலர் பாடசாலையின் 38வது ஆண்டு விடுகை விழாவும், பரிசளிப்பும் கோபாலபுரம் தமிழ் வித்தியாலய மண்டபத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

பாலர் பாடசாலையின் தலைமை ஆசிரியை பவள ராசா சாந்தி தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவுக்கு குச்சவெளி பிரதேச சபை செயலாளர் வெளிண்டன் இந்திரஜி பிரதம அதிதியாகவும், கோபாலபுரம் வருமான பரிசோதகர் கதிரவேல் லிங்கேஸ்வரர் கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது பாடசாலை சிறார்களினால் கலை கலாசார நிகழ்வுகளோடு விடுகை பெற்றுச் செல்லும் சிறார்களுக்குப் பரிசில் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# குப்பை மேட்டினால் பாதிக்கப்படும் கிண்ணியா, சின்னத் தோட்டம் மக்கள்

(எஸ்.கீதபொன்கலன்)



கிண்ணியா, சின்னத் தோட்டம் மக்கள் அருகே உள்ள குப்பை மேட்டினால் பாரிய சுகாதாரச் சீர்கேடுகளை எதிர் கொள்வதாகச் சண்முகம் குகதாசன் எம்.பி தெரிவிக்கின்றார்.

இக்குப்பை மேட்டில் உள்ள குப்பைகளை நேர்த்தியான முறையில் கழிவு மேலாண்மை செய்ய வேண்டுவதோடு கிண்ணியா நகர சபையின் செயலாளர் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று அண்மையில் நடைபெற்ற கிண்ணியா பிரதேச சபை ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் பங்குபற்றிய மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் கேட்டுக் கொண்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்

இங்கே தேங்கியுள்ள அதீத உணவுக் கழிவுகள் அயல் காடுகளில் உள்ள யானைகள் வருவதற்கும் ஏதுவாகிறது. இந்த குப்பைமேட்டுக்கு அருகாமையில் ஆலங்கேணி,ஈச்சந்தீவு, சின்னதோட்டம், பாரதிபுரம் முதலிய கிராம மக்கள் பயன்படுத்துகின்ற இந்து மயானம் மற்றும் மக்களின் குடியிருப்புகள் அமைந்துள்ளது.

குப்பை மேட்டில் உணவு உண்ண வருகின்ற காட்டு யானைகள் இரவு பகலாக அங்கேயே தரித்து நிற்கின்றன.

இதனால் மக்கள் மயானத்தில் சடலங்களை அடக்கம் செய்வதற்கோ குடியிருப்புகளில் வசிக்கவோ முடியாத நிலை உருவாகி உள்ளது. எனவே குறித்த குப்பை மேட்டினை அங்கிருந்து விரைவாக அகற்ற கிண்ணியா நகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும். அதோடு இக் குப்பை மேட்டினைச் சுற்றி 600 மீற்றர் நீளமான மின்சார வேலி அமைக்க வேண்டும் என நான் வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தைக் கேட்டுக் கொள்கின்றேன் என்றார்.

# சம்மாந்துறையில் சட்ட விரோத மண் அகழ்வைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

(முகம்மட் முக்தார்)

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள ஆறுகளிலும் மற்றும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களிலும், சட்ட விரோத மண் அகழ்வினை தடை செய்வது தொடர்பான நடவடிக்கைகளை சம்மாந்துறை பிரதேச செயலகம் மேற்கொண்டுள்ளது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட நெல்லிக்காட்டு வட்டை, ஆலையடி வட்டை ஆகிய பிரதேசங்களில் சட்ட விரோத மண் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதனை கட்டுப்படுத்தி சட்ட விரோத மண் அகழ்வைத் தடை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

குறித்த சட்ட விரோத மண் அகழ்தல் தொடர்பில் தற்போது காணப்படுகின்ற சட்ட நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துதல் சம்பந்தமாகவும் சட்ட விரோத மண் அகழ்தலைக் கட்டுப்படுத்த பொலிசாரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# ஓட்டமாவடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் புதிய அலுவலகம் திறப்பு

(எஸ். சினீஸ் கான்)

ஓட்டமாவடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் புதிய காரியாலய திறப்பு விழா சங்கத்தின் தலைவர் எம்.எம்.எஸ். ஹாறூன் ஸஹ்வியின் தலைமையில் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவும்



கௌரவ அதிதியாகக் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள ஆணையாளர் பி. தனேஸ்வரன்ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திருமலையில் பெரும்போக நெல் அறுவடை விழா

(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்ட உப்பு வெளி கமநல சேவைகள் பிரிவுக்குட்பட்ட முத்துநகர் ஒன்றிணைந்த விவசாய அமைப்புக்களின் பெரும்போக நெல் அறுவடை விழா வியாழக்கிழமை முத்து நகர் வயல் நிலப் பகுதியில் இடம்பெற்றது.

இந்த பகுதியில் இயங்கி வரும் விவசாய அமைப்புக்களான தகரவெட்டுவான், முத்து நகர், மத்திய வெளி ஆகிய விவசாய சம்மேளனங்கள் இணைந்து இந்த விழாவை ஏற்பாடு செய்திருந்தன. இதன் போது பெரும் போக நெல் அறுவடை இடம்பெற்றதுடன் பாரம்பரிய விவசாய கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன. நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களுக்கான நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாகத் தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன கலந்து கொண்டார். திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சுதாகரன், உப்பு வெளி கமநல சேவைகள் நிலைய உத்தியோகஸ் தர்கள், தம்பலகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# மலையக மக்களின் வாக்குறுதிகள் மறுக்கப்பட்டால் போராட்டம் செய்வோம்

## திகாம்பரம் எம்.பி எச்சரிக்கை





(க.கிஷாந்தன்)

மலையக மக்களுக்கான உரிமைகள் தொடர்பில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும். அவ்வாறு இல்லையேல் வீதியில் இறங்கிப் போராடவும் தயங்கமாட்டோம் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான திகாம்பரம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சனிக்கிழமை ஹற்றனி கட்சி செயற்பாட்டாளர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்க்கட்சியிலிருந்தபோது தேசிய மக்கள் சக்தி மக்களுக்குப் பல உறுதிமொழிகளை வழங்கியது. அக்கட்சியினர் தற்போது ஆட்சிக்கு வந்துள்ளனர். ஆனால் அந்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை.

அரிசி விலையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தேங்காய் விலையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. எரிபொருள் விலை மற்றும் மின்சார கட்டணம் என்பன பாரிய அளவில் குறைக்கப்படும் எனக் கூறப்பட்டது. அதுவும் நடக்கவில்லை. மின்சாரக் கட்டணத்தைக்கூட பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுதான் குறைத்துள்ளது. தற்போது கூட்டுறவு தேர்தல்களில் அரசாங்கம் தோல்வி அடைந்துவருகின்றது. எனவே, வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் அரசாங்கத்துக்கு இருப்பதால் அரிசி மாபியாவுக்கு முடிவு கட்ட வேண்டும். கொள்ளையர்களைப் பிடிக்க வேண்டும். அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களை அவதானித்து வருகின்றோம்.

அத்துடன், மலையக மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மலையக மக்களுக்குக் காணி உரிமை வழங்கப்படும் என்றார்கள், சம்பளம் 2 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்றார்கள். அவற்றை வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கினால் முழுமையான ஆதரவு வழங்கப்படும்.அவ்வாறு இல்லையேல் வீதியில் இறங்கிப் போராடவும் தயங்கமாட்டோம் என்றார்.



தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தின் வருடாந்த தைப்பூச தேர்த்திருவிழாவையொட்டி ஆலய பரிபாலன சபைத் தலைவர் தர்மராஜ் தலைமையில் நேற்று (19) நடைபெற்ற விசேட கூட்டத்தில் தலவாக்கலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உடுகம மற்றும் போக்குவரத்து பொலிஸார் கலந்து கொண்டனர். இதன்போது நடைபெறவிருக்கும் தேர் தேர்த்திரு விழாவின்போது தலவாக்கலை பொலிஸாரின் பூரண ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

(படம் : தலவாக்கலை பி.கேதீஸ்)

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சான்றிதழ் வழங்கல் நிகழ்வு



(பேரின்பராஜா சபேஷ்)

கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் விரிவாக்கல் கற்கைகள் நிலையத்தினால் நடத்தப்பட்ட டிப்ளோமா மற்றும் சான்றிதழ் கற்கை நெறிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை (18) கிழக்குப் பல்கலைக் கழக மட்டக்களப்பு தொழில்நுட்ப பூங்கா கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் விரிவாக்கல் கற்கைகள் நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் எஸ். ஜெயராஜா தலைலமயில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் வ.கனகசிங்கம் கலந்துகொண்டு கற்புநெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கி வைத்தார். விவசாயம் 60 பேரும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் 16 பேரும் ஆய்வுக்கூட தொழிநுட்பம் 04 பேரும் பன்மைத்துவம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சேவை வழங்கலின் மூலம் அமைதியைப் பேணுதல் கற்கை நெறியில் 09 பேரும் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர்.

# காணி மோசடி: அரச உத்தியோகத்தர் கைது

(கி.வசந்தன்)

அரச காணி ஒன்றினை போலி ஆவணம் தயாரித்து 22 மில்லியன் ரூபாய்க்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் வவுனியா மாவட்ட செயலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் குற்றப் புலனாய்வுப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். வவுனியா, பம்பைமடு பகுதியில் உள்ள அரச காணி ஒன்றினை போலி ஆவணங்கள் மூலம் 22 மில்லியன் ரூபாய்க்கு கடந்த சில வருடங்களுக்கு முன்னர் விற்பனை செய்யப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய விசாரணைகள் இடம்பெற்றிருந்தன. இந்நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர் என வவுனியா மாவட்ட செயலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளின் பின் குறித்த உத்தியோகத்தரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# உணவகம் உடைந்து வீழ்ந்து; ஆறு மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதி



(க.கிஷாந்தன்)

கினிகத்தேன நகரிலுள்ள உணவகமொன்றில் பாதுகாப்பற்ற முறையில் அமைக்கப்பட்டிருந்த அறையொன்று சனிக்கிழமை (18) உடைந்து விழுந்ததில் ஆறு மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

தரம் 10 இல் கல்வி பயிலும் ஆறு மாணவர்கள், கினிகத்தேன நகருக்கு பிரத்தியேக வகுப்புக்கு வந்திருந்த நிலையில், குறித்த ஹோட்டலுக்கு சென்று உணவருந்தியுள்ளனர்.

ஹோட்டலில் இருந்த அறையொன்றின் அடிதளத்தில் பலகைகள் உடைந்ததையடுத்து மாணவர்கள் கீழே விழுந்துள்ளனர். சுமார் 15 அடிவரை பள்ளத்துக்கு மாணவர்கள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இதனால் காயமடைந்த மாணவர்கள் பிரதேச வாசிகளால் கினிகத்தேன வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளனர்.

குறித்த உணவகம் பாதுகாப்பற்ற முறையிலும், சுகாதார பாதுகாப்பு இன்றியும் இயங்கிவந்துள்ளது என மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் கினிகத்தேன பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# வீதியை விட்டு விலகி வேன் விபத்து

## மூவர் காயம்



(மூதூர் நிருபர் எம்.என்.எம்.புஹாரி)

திருகோணமலை –மட்டக்களப்பு பிரதான வீதியின் மூதூர் பொலிஸ் பிரிவில் உள்ள இருதயபுரம் பகுதியில் சிறிய ரக வேன் ஒன்று பாதையைவிட்டு விலகி விபத்துக்குள்ளானதில் மூவர் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை (19) இடம்பெற்றுள்ளது. சேருவில பகுதியிலிருந்து திருகோணமலை நோக்கிக் குறித்த வேன் பயணித்த போது வேகக் கட்டுப்பாட்டை இழந்து சிறிய மரம் ஒன்றுடன் மோதி வயலுக்குள் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. வாகனத்தில் பயணித்தவர்கள் பேருவளை பகுதியைச் சேர்ந்தவர்களெனத் தெரியவருகிறது.

# இராணுவத்தால் நெல் களஞ்சிய சாலைகள் துப்புரவு



ஜனாதிபதியின் வழிகாட்டுதலின் கீழ், நாடு முழுவதும் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் “தூய இலங்கை“ தேசிய திட்டத்தின் ஒரு பகுதியாகப் பெரும்போக பருவத்தின் நெல் அறுவடையைக் கொள்முதல் செய்வதற்கான திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளதால் இராணுவத்தால் நெல் களஞ்சிய சாலைகள் துப்பரவு செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் சொந்தமான 209 நெல் களஞ்சிய சாலைகள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் சொந்தமான நெல் களஞ்சிய சாலைகள் மற்றும் சுற்றியுள்ள நிலம் நீண்ட காலமாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பதால், அவற்றைப் பயன்படுத்த ஏற்றதாக மாற்றவும், சிறிய பழுதுபார்ப்புகளை மேற்கொள்ளவும் அவற்றைச் சுத்தம் செய்யும் தேசிய நலனுக்காகப் பாதுகாப்புப் படையின் உதவி நாடப்பட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக இராணுவத் தளபதியான லெப்டினன் ஜெனரல் லசந்த ரொட்ரிகோவின் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதலின் கீழ் 18 முதல் 27 வரை அனைத்து பாதுகாப்புப் படைத் தலைமையகங்களாலும் நாடு முழுவதும் நெல் களஞ்சிய சாலைகளைச் சுத்தம் செய்யும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# அழகிய மத்திய மலைநாடு வேலைத்திட்டம் ஆரம்பம்




(எம்.ஏ. அமீனுல்லா)

மத்திய மாகாணத்தின் அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் அழகிய மத்திய மலைநாட்டில் சுத்தமான சூழலை ஏற்படுத்தும் வேலைத் திட்டப் பணிகள் கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்துடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதன் ஒரு கட்டமாக வெள்ளிக்கிழமை கண்டி மாவட்டத்தின் வத்துகாமம் நகரசபை பிரதேசத்திலும் மற்றும் பாத்ததும்பர பிரதேச பகுதிகளிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுற்றாடல், சமூக மற்றும் நெறிமுறை உடனான அணுகுமுறைகள் மூலம் பரந்த சமூக மாற்றத்தின் ஊடாக அபிவிருத்தியடைந்த சமூகத்தை உருவாக்கும் எதிர்பார்ப்புடன் இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு, குறித்த சுற்றாடல் கருத்திட்டதிற்கு முன்னு ரிமையளித்து ”சுத்தமான சூழல் – அழகிய மத்திய நாடு” வேலைத்திட்டம் தற்பொழுது மலையகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி சமிலா அத்தபத்து அவர்களும் இணைந்து கொண்டனர். வத்துகாமம் நகர சபையின் செயலாளர் பிரியந்த மடுகல்ல மற்றும் பாத்ததும்பர பிரதேச சபையின் செயலாளர் இனோகா குலதுங்க வத்துகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கபில பண்டார மற்றும் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.




## தமிழக நிதி நிலைமை கட்டுக்குள் :

# “மத்திய அரசு நிதி ஒதுக்காததால் கடன் சுமை”



“தமிழக அரசின் நிதி நிலைமை கட்டுக்குள்ளேயே இருக்கிறது. மெட்ரோ திட்டங்கள் போல் பல்வேறு திட்டங்களுக்கும் மத்திய அரசு போதிய நிதி ஒதுக்காததாலேயே மாநில அரசுக்கு கடன் சுமை அதிகரித்துள்ளது. இருப்பினும் நிதிக் குழு பரிந்துரையின் வரம்பை மீறாமலேயே கடன் பெற்றுள்ளோம்.” என நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

“தமிழக அரசு திவாலாகிறது” என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி விமர்சித்திருந்த நிலையில் அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று ஞாயிற்றுக்கிழமை விருதுநகரில் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

தமிழ்நாடு அரசு திவாலாகிறது என எடப்பாடி பழனிசாமி கூறியது அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டு. அரசின் நிதி நிலைமை குறித்த எடப்பாடி பழனிசாமியின் குற்றச்சாட்டு வேடிக்கையாக உள்ளது. நிதி முகாமைத்துவத்தில் தமிழக அரசு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

மெட்ரோ ரயில் திட்டத்துக்கு மத்திய அரசு போதிய நிதி ஒதுக்கவில்லை. மெட்ரோ ரயில் திட்டத்துக்கு ரூ.26 ஆயிரம் கோடி நிதியை தமிழக அரசே ஒதுக்கியது. பிரதமர் வீடு வழங்கும் திட்டத்துக்கு தமிழக அரசே கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. இவ்வாறாக, மத்திய அரசு போதிய நிதி ஒதுக்காததாலேயே மாநில அரசுக்கு கடன் சுமை அதிகரித்துள்ளது.

இருப்பினும் தமிழகத்தின் நிதி நிலைமை கட்டுக்குள் உள்ளது. நிதி நிலைமையை கட்டுக்குள் வைக்க தேவையான பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம். ஒவ்வொரு நிதியாண்டும் நிதிக்குழு நிர்ணயம் செய்த அளவைவிட குறைவாகவே கடன் பெற்றுள்ளோம் என்றார்.

# திமுகவில் இணைந்தார் திவ்யா சத்யராஜ்



(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது )

நடிகர் சத்யராஜின் மகளும் ஊட்டச்சத்து நிபுணருமான திவ்யா சத்யராஜ் நேற்று ஸ்டாலின் முன்னிலையில் திமுகவில் இணைந்தார். இது தொடர்பாக திமுக வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், “தமிழக முதல்வர், கழகத் தலைவர் முன்னிலையில், நேற்று காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நடிகர் சத்யராஜின் மகளும், ஊட்டச்சத்து நிபுணருமான திவ்யா சத்யராஜ் திமுக.,வில் இணைந்தார்.

அப்போது, கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் உடனிருந்தனர்.” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது,

நடிகர் சத்யராஜ் திராவிடக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டவர் என்பது அனைவரும் அறிந்ததே. இந்நிலையில் அவரது மகள் திவ்யா நேற்று திமுகவில் இணைந்துள்ளார். சமீப காலமாகவே திவ்யா தனது சமூகவலைதளப் பக்கங்களில் அரசியல் பதிவுகளைப் பகிர்ந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நடிகர் சைஃப் அலிகானை கத்தியால் குத்திய சம்பவம்

## விஜய் தாஸ் மும்பை பொலிஸாரால் அதிரடி கைது



( திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது )

நடிகர் சைஃப் அலி கானை கத்தியால் குத்திய விஜய் தாஸ் என்பவரை மும்மை பொலிஸ் கைது செய்துள்ளனர். சயிஃப் அலிகானை கத்தியால் குத்திய சம்பவத்தில் 35 தனிப்படைகள் அமைத்து குற்றவாளிகளை தேடி வந்த நிலையில் விஜய் தாஸ் தானேவில் வைத்து கைது செய்யப்பட்டார்.

மும்பையில் உள்ள வீட்டிற்கு திருட வந்த நபரை தடுக்க முயன்றபோது கத்தியால் குத்தியதில் நடிகர் சயிஃப் அலிகான் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

ஷர்மிளா தாகூர் மற்றும் கிரிக்கெட் வீரர் மன்சூர் அலி கான் பட்டோடியின் மகன் சைஃப் அலி கான். இவர் 1993 இல் “பரம்பரா” திரைப்படத்தில் நடிகராக அறிமுகமானார்.

இந்நிலையில் நடிகர் சைஃப் அலி கானை கத்தியால் குத்திய விஜய் தாஸ் என்பவரை மும்பை பொலிசார் கைது செய்தது.

தானேவில் உள்ள மதுபான பாரில் விஜய் தாஸ் வேலை செய்து வந்ததாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்ததையடுத்து விஜய்தாஸை கைது செய்து விசாரணை நடத்தியதில் சயிஃப் அலிகானை கத்தியால் குத்தியதை அவர் ஒப்புக்கொண்டமை தெரியவந்தது.

## 16 பேர் மர்ம மரணம்; விசாரணை குழு அமைத்தார் அமித்ஷா



காஷ்மீரின் ரஜோரி மாவட்டம் புதால் கிராமத்தில் கடந்த 45 நாளில் மர்ம நோயால் 45 பேர் பலியாகினர். காய்ச்சல், குமட்டல், சுயநினைவு இழப்பு போன்ற பாதிப்புடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர்கள் ஓரிரு நாட்களில் பலியானது அதிர்ச்சி அளித்தது. இந்த மர்ம மரணங்கள் தொடர்பாக விசாரிக்க பல்வேறு அமைச்சகங்கள் அடங்கிய விசாரணை குழுவை ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அமைத்துள்ளார்.

இக்குழுவில் ஒன்றிய உள்துறை அமைச்சகத்தின் மூத்த அதிகாரி, சுகாதாரம் மற்றும் குடும்ப நலன், விவசாயம், ரசாயனங்கள் மற் றும் உரங்கள் மற்றும் நீர்வள அமைச்ச கங்களின் நிபுணர்கள் இடம்பெறுவார்கள். இக்குழு இன்று புறப்பட்டு, உள்ளூர் நிர்வாகத்துடன் இணைந்து ஆய்வு செய்ய உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விஜய் மக்கள் சந்திப்புக்கு ஏற்பாடு




காஞ்சிபுரம், பரந் தூர் ஏகனாபுரம் பகுதியில் இரண்டாவது பசுமை விமான நிலையம் அமைக்க மத்திய மற்றும் மாநில அரசுகள் முடிவு செய்த நிலையில் அதற்கான பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

அதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 900 நாட்களுக்கும் மேலாக ஏகானாபுரம் கிராம மக்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அதற்கு பல்வேறு அரசியல் கட்சிகள் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். இந்த சூழலில் தமிழக வெற்றில் கழக தலைவர் விஜய், தனது கட்சியின் முதல் மாநாட்டில் பரந்தூர் பசுமை விமான நிலைய திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்ததோடு, விவசாய நிலங்களை கையகப்படுத்த கூடாது என தீர்மானமும் நிறைவேற்றி இருந்தார்.

இதனைத்தொடர்ந்து தமிழக வெற்றிக்கழகத்தின் முதல் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு பரந்தூர் போராட்ட குழுவினர் நன்றி தெரிவித்தனர். தீர்மானத்துடன் நின்று விடாமல், பரந்தூர் மக்களை சந்திக்கவும் விஜய் திட்டமிட்டார். இதற்காக காஞ்சீபுரம் மாவட்ட பொலிஸாரிடம் அனுமதி கோரப்பட்டது. கட்சி தொடங்கிய பிறகு முதல் முறையாக விஜய் மக்களை சந்திக்கும் நிகழ்வு என்பதால் ஏற்பாடுகளை தமிழக வெற்றிக்கழகத்தினர் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் பரந்தூர் விமான நிலையத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து போராடி வரும் மக்களை விஜய் நாளை சந்திக்கிறார். இதன்படி பரந்தூர் தனியார் திருமண மண்டபத்தில் போராட்டக் குழுவினரையும், கிராம மக்களையும் நாளை விஜய் நேரில் சந்திக்க உள்ள நிலையில் இன்று மதியம் 1 மணியளவில் இந்த சந்திப்பு நடைபெற உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# ஜோதிடம் பலிக்காததால் ஜோதிடரை கொன்ற பெண்: விசாரணையில் பகீர் தகவல்



நாகர்கோவில் பெருவிளை அருகே உள்ள கோட்டவிளை பகுதியை சேர்ந்தவர் ஜோன் ஸ்டீபன். நாட்டு வைத்தியரான இவர், ஜோதிடமும் பார்த்து வந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த 8ஆம் திகதி ஜோன் ஸ்டீபன் வீட்டில் பிணமாக கிடந்துள்ளார். அவரது உடலில் ரத்த காயங்கள் இருந்தன. இதுபற்றிய தகவல் அறிந்த ஆசாரிபள்ளம் பொலிசார் சம்பவ இடத்துக்கு வந்து உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

பின்னர் ஜோன் ஸ்டீபனின் மனைவி அளித்த புகாரின் பேரில் பொலிசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். இந்த நிலையில் பிரேத பரிசோதனையில் ஜோன் ஸ்டீபன் கொலை செய்யப்பட்டது தெரியவந்தது. இதையடுத்து தனிப்படை பொலிசார் விசாரணை நடத்தினர். இதில் கொலை தொடர்பாக இரணியல் அருகே உள்ள கட்டி மாங்கோடு பகுதியை சேர்ந்த கலையரசியை (43), கைதுசெய்தனர்.

இந்நிலையில் பொலிசார் நடத்திய விசாரணையில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியானது. கைது செய்யப்பட்ட கலையரசி கணவனை பிரிந்து வாழ்ந்து வருகிறார். அவர் தன் கணவருடன் சேர்ந்து வாழ்வதற்காக ஜோன் ஸ்டீபனிடம் பலமுறை ஜோதிடம் பார்த்தும் கணவருடன் சேர்ந்து வாழ முடியாததால் கொடுத்த பணத்தை திருப்பிக்கேட்டதில் ஏற்பட்ட தகராறு காரணமாக கலையரசி ஜோன் ஸ்டீபன் கூலிப்படையை ஏவி கொலை செய்தமை தெரியவந்துள்ளது.

# மகா கும்பமேளா நிகழ்வில் பாரிய தீ விபத்து



உத்தரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நகரில் நேற்று மாலை நடைபெற்ற மகா கும்பமேளா நிகழ்வில் பாரிய தீ விபத்து ஏற்பட்டதால் புனித நகரத்தில் பரபரப்பு ஏற்பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மகா கும்பமேளா நிகழ்வு நடைபெறும் கூடாரத்திற்குள் இருந்த எரிவாயு சிலிண்டர் வெடித்ததால் தீ விபத்து ஏற்பட்டதாக பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த தீ விபத்தை அடுத்து பல தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து தீயை கட்டுப்படுத்தும் பணிகளை மேற்கொண்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தீ விபத்தினால் உண்டான சேத விபரங்கள் குறித்து மதிப்பிடப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

## காசாவில் போர் நிறுத்தம் அமுல்:

# விடுதலையாகும் 3 பேரின் பெயர் பட்டியலை வெளியிட்டது ஹமாஸ்



இஸ்ரேல், ஹமாஸ் இடையேயான போர் ஓராண்டுக்கு மேல் நீடித்து வந்த நிலையில் இந்த போரை நிறுத்த அமெரிக்கா, கத்தார், எகிப்து போன்ற நாடுகள் மத்தியஸ்தம் செய்தன. அதன் அடிப்படையில், காசா முனையில் தங்கள் வசம் உள்ள இஸ்ரேலிய பணய கைதிகளை விடுதலை செய்ய ஹமாஸ் ஒப்புக்கொண்டது. அதேபோல், காசாவில் தாக்குதலை நிறுத்தவும் இஸ்ரேல் ஒப்புக்கொண்டுள்ளது.

இந்நிலையில், போர் நிறுத்தம் மொத்தம் 3 கட்டங்களாக இடம்பெறும் எனவும் அதில் முதல் கட்டமாக 6 வாரங்களில் (42 நாட்கள்) 33 பணய கைதிகளை விடுதலை செய்ய ஹமாஸ் ஒப்புக்கொண்டது. 33 பணய கைதிகளுக்கு ஈடாக தங்கள் நாட்டு சிறைகளில் உள்ள பாலஸ்தீனியர்கள் 1,904 பேரை இஸ்ரேல் விடுதலை செய்வோம் எனவும் குறிப்பிட்டுள்ளது.

இந்த போர் நிறுத்தம் நேற்று மதியம் 12 மணிக்கு (இஸ்ரேல் நேரப்படி காலை 8.30 மணிக்கு) அமுலுக்கு வரவிருந்தது. போர் நிறுத்தத்தின் முதல் நாளில் இஸ்ரேலிய பணய கைதிகளில் 3 பேரை ஹமாஸ் விடுதலை செய்ய வேண்டும். அதற்கு ஈடாக இஸ்ரேல் சிறையில் உள்ள பாலஸ்தீனியர்கள் 90 பேர் விடுதலை செய்யப்பட வேண்டும். அதேவேளை, ஒப்பந்தப்படி இரு தரப்பும் விடுதலை செய்யப்பட உள்ள நபர்களின் பெயர் விவரங்களை 24 மணிநேரத்திற்கு முன்னதாகவே தெரிவிக்க வேண்டும். எனவும் குறிப்பிட்ட நிலையில் இஸ்ரேல் விடுதலை செய்ய உள்ள 90 பாலஸ்தீனியர்களின் பெயர் விவரத்தை நேற்று வெளியிட்டுவிட்டது.

ஆனால், ஹமாஸ் ஆயுதக்குழு விடுதலை செய்ய வேண்டிய இஸ்ரேலிய பணய கைதிகளின் விவரங்கள் நேற்று மதியம் 2 மணிவரை (இஸ்ரேல் நேரப்படி 10.30 மணி) வெளியாகவில்லை. இதனால், போர் நிறுத்தம் அமுலுக்கு வராமல் இருந்தது.

இதையடுத்து, காசா முனையில் இஸ்ரேல் அதிரடி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் 108 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில், சுமார் 3 மணிநேர தாமதத்திற்குபின் விடுதலை செய்யப்பட உள்ள இஸ்ரேலிய பணய கைதிகள் 3 பேரின் பெயர் பட்டியலை ஹமாஸ் தற்போது வெளியிட்டுள்ளது.

அதன்படி, பணய கைதிகளான ரோமி கொனின் (வயது 24), ஏமி டமாரி (வயது 28), டோரன் ஸ்டான்பிரிசர் (வயது 31) ஆகிய 3 பேரை நேற்று விடுதலை செய்வதாக ஹமாஸ் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# 47ஆவது ஜனாதிபதியாக ட்ரம் இன்று பதவியேற்பு

## அமெரிக்காவில் வரலாறு காணாத பாதுகாப்பு



அமெரிக்க ஜனாதிகதியாக டொனால்ட் ட்ரம்ப் இன்று பதவியேற்கவுள்ள நிலையில், பதவியேற்பு விழாவையொட்டி தலைநகரில் வரலாறு காணாத பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அமெரிக்காவில் கடந்த நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் குடியரசு கட்சி வேட்பாளரான முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ஆளும் ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் கமலா ஹாரிசை வென்றார். இதைத் தொடர்ந்து, அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக ட்ரம்ப் இன்று பதவியேற்க உள்ளார். இதற்காக புளோரிடாவில் இருந்து புறப்பட்ட டிரம்ப் தலைநகர் வாஷிங்டனை நேற்று வந்தடைந்தார். இந்நிலையில், இராணுவ வீரர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள ஆர்லிங்க்டன் தேசிய கல்லறைக்கு டிரம்ப் சென்று மலர் வளையம் வைத்து நேற்று அஞ்சலி செலுத்தினார். பதவியேற்கும் முன்னர் வெள்ளை மாளிகையின் பாரம்பரிய வழக்கப்படி செயின்ட் ஜான்ஸ் எபிஸ்கோபல் தேவாலயத்தில் பிரார்த்தனை செய்து அதைத் தொடர்ந்து, வெள்ளை மாளிகைக்கு வரும் டிரம்புக்கு தற்போதைய ஜனாதிபதியான ஜோ பைடன், அவரது மனைவி ஜில் பைடன் இருவரும் தேநீர் விருந்து அளித்து வரவேற்பார்கள். பின்னர், தற்போதைய ஜனாதிபதி பைடன், புதிய ஜனாதிபதி டிரம்ப்பை நாடாளுமன்றத்திற்கு அழைத்துச் செல்வார். அங்கு முறைப்படி 47ஆவது ஜனாதிபதியாக டிரம்ப் பதவியேற்றுக் கொள்வார். சம்பிரதாயப்படி, தனது முதல் அறிவிப்பு குறித்த ஆவணத்தில் டிரம்ப் கையெழுத்திட்டு ஜனாதிபதி பணியை ஆரம்பிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த பதவியேற்பு வைபவத்தில் பல்நாட்டு தலைவர்களும் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அமெரிக்காவில் அமுலுக்கு வந்தது டிக்டாக் தடை




அமெரிக்காவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் அமல்படுத்தப்பட்ட புதிய தடைச்சட்டம் காரணமாக அமெரிக்கர்கள் 'டிக் டொக்' செயலியை இனி பயன்படுத்த முடியாது எனவும் அதேவேளை ப்ளே ஸ்டோர், ஆஃப் ஸ்டோரில் இருந்தும் டிக்டொக் செயலி நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் சுமார் 170 மில்லியன் பயனர்களைக் கொண்ட இந்த செயலி தற்போது டை செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கும் செய்திகள் சமூக ஊடகங்களில் பரவி வருகின்றன. அதில், "மன்னிக்கவும். இனி டிக்டாக் செயலி கிடைக்காது." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், "ட்ரம்ப் ஜனாபதியாக பதவியேற்றதும், டிக் டொக் செயலியை மீண்டும் கொண்டுவருவதற்கான தீர்வில் எங்களுடன் இணைந்து பணியாற்றுவதாக கூறியிருப்பது எங்களின் அதிர்ஷ்டம்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் டிக் டொக் நிறுவனம் வெளியிட்டிருந்த மற்றொரு செய்தியில் தங்களின் சேவை தற்காலிகமாக கிடைக்காது என்று பயனர்களுக்கு அறிவித்திருந்தது. மேலும் அமெரிக்காவில் எமது சேவையை மீண்டும் ஆரம்பிக்க முடிந்தவரை முயற்சிக்கும் என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விவாகரத்து வதந்திக்கு முற்றுப்புள்ளி:

# மனைவியின் பிறந்தநாளுக்கு ஒபாமா உருக்கமான வாழ்த்து

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியாக பராக் ஒபாமா மற்றும் அவரது மனைவி மிச்செல் ஒபாமா விவாகரத்து செய்ய உள்ளதாக வதந்திகள் பரவி வருகின்றன.

முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்டரின் அரசு இறுதிச் சடங்கில் ஒபாமாவுடன் மிச்செல் வரவில்லை. மேலும் ஜனவரி 20 ஆம் திகதி நடக்கும் டிரம்ப் ஜனாதிபதியாக பதவியேற்கும் விழாவிலும் ஒபாமாவுடன் மிச்செல் கலந்துகொள்ளவில்லை என அறிவிக்கப்பட்டது.

இதன் விளைவாகவே விவாகரத்து வதந்திகள் வலுப்பெற்றன. இந்நிலையில் மிச்செல்லின் பிறந்தநாளுக்கு தனது எக்ஸ் பதிவில் உருக்கமாக வாழ்த்து தெரிவித்து வதந்திகளுக்கு ஒபாமா முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.



# நைஜீரியாவில் எரிபொருள் தாங்கி வெடித்துச் சிதறியதில் 70 பேர் பலி



ஆபிரிக்காவின் வடக்கு நைஜீரியாவில் எரிபொருள் தாங்கி கவிழ்ந்து எரிபொருளைக் கொட்டி வெடித்துச் சிதறியதில் 70 பேர் உயிரிழந்தனர். 56 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்

நைஜர் மாநிலத்தின் சுலேஜா பகுதிக்கு அருகே நேற்று முன்தினம் அதிகாலையில் தாங்கியில் இருந்து மற்றொரு வாகனத்துக்கு ஜெனரேட்டரைப் பயன்படுத்தி பெட்ரோலை மாற்ற முயன்றபோது குறித்த வெடி விபத்து ஏற்பட்டது. இது பெற்றோலைக் கையாளுபவர்கள் மற்றும் அருகில் இருந்தவர்கள் மரணத்திற்கும் வழிவகுத்தது என தேசிய அவசரநிலை முகாமைத்துவ நிறுவனத்தின் (NEMA) பிரதிநிதி ஹுசைனி இசாதெரிவித்தார்.

# ஈரான் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் இருவர் சுட்டுப் படுகொலை



ஈரான் தலைநகர் டெஹ்ரானில் உள்ள அந்நாட்டு உச்ச நீதிமன்றத்தில் அலி ரசினி, முகமது மொகிசே ஆகிய நீதிபதிகள் நேற்று தங்கள் அறையில் ஓய்வெடுத்து கொண்டிருந்தனர். அப்போது நீதிமன்ற வளாகத்துக்குள் நுழைந்த மர்ம நபர், 2 நீதிபதிகளையும் துப்பாக்கியால் சரமாரியாக சுட்டார். இதில் பலத்த காயமடைந்த இருவரும் சம்பவ இடத்திலேயே உடல் சரிந்து பலியாகினர். பின்னர் அந்த மர்ம நபர் தன்னைதானே சுட்டு கொண்டு தற்கொலை செய்து கொண்டார். சம்பவம் தொடர்பில் ஈரான் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொலை முயற்சியில் இருந்து நானும் சகோதரியும் 20 நிமிட இடைவெளியில் உயிர் தப்பினோம்



பங்களாதேஷில் கடந்த ஆண்டு ஆகஸ்ட் 5ஆம் திகதி நடைபெற்ற மாணவர் புரட்சியின் போது, தன்னையும் தனது சகோதரி ரெஹானாவையும் கொல்ல சதி நடந்ததாகவும், 20 முதல் 25 நிமிட இடைவெளியில் தாம் உயிர் பிழைத்ததாகவும் பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா கூறியுள்ளார்.

பங்களாதேஷில் கடந்தாண்டு நடைபெற்ற மாணவர் போராட்டதால், அங்கு பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா பதவியை ராஜினமா செய்துவிட்டு இந்தியாவில் தஞ்சம் அடைந்தார். இந்நிலையில் பங்களாதேஷ் நீதிமன்றம், ஷேக் ஹசீனாவுக்கு பிடியாணை பிறப்பித்தது. ஷேக் ஹசீனா பிரதமராக இருந்த 15 ஆண்டு பதவி காலத்தில், மனித குலத்துக்கு எதிரான குற்றச்சாட்டுகளை புரிந்தார் எனவும் அதில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. ஷேக் ஷீனாவை ஒப்படைக்க கோரி இந்தியாவிடம் முகமது யூனுஸ் தலைமையிலான பங்களாதேஷ் இடைக்கால அரசு வேண்டுகோள் விடுத்தது. இதற்கு இந்தியா இன்னும் பதில் அளிக்கவில்லை. ஷேக் ஹசீனாவின் விசா காலத்தை இந்தியா நீட்டித்தது. ஆனால் அவரது படவுச்சீட்டை வங்களாதேஷ் இடைக்கால அரசு இரத்துச் செய்துள்ள நிலையில் அவாமி லீக் கட்சியின் முகநூல் பக்கத்தில் ஷேக் ஷீனா வெளியிட்ட ஓடியோ தகவலில் கூறியிருப்பதாவது: கடந்தாண்டு ஆகஸ்ட் 5ஆம் திகதி நானும், எனது சகோதரி ரெஹானாவும் 20- 25 நிமிட இடைவெளியில் உயிர் பிழைத்தோம். எங்களை கொல்ல அரசியல் எதிரிகள் சதி செய்தனர். என உருக்கமாக கூறியுள்ளார்.

# மொராக்கோ அருகே படகு கவிழ்ந்ததில் 40க்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு!

மேற்கு ஆபிரிக்காவின் அட்லாண்டிக் கடற்கரையில் படகு கவிழ்ந்ததில் 40க்கும் மேற்பட்ட பாகிஸ்தானியர்கள் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. ஐரோப்பாவில் குடியேறும் நோக்கில் அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்கு ஆபிரிக்காவில் உள்ள மோரிடானியா, மேற்கு சஹாரா, மொராக்கோ நாடுகள் வழியாக ஐரோப்பாவின் ஸ்பெயினுக்குள் பலர் சட்டவிரோதமாக நுழைவதாகக் கூறப்படுகிறது. இவ்வாறு ஐரோப்பாவில் குடியேறும் நோக்கில் மோரிடானியாவில் இருந்து படகு மூலம் 65 பாகிஸ்தானியர்கள் உள்பட 80 பேர் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இவர்கள் சென்ற படகு மொராக்கோவின் கட்டுப்பாட்டில் உள்ள துறைமுக நகரமான டக்லா அருகே கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் 44 பாகிஸ்தானியர்கள் உள்பட 50 பேர் உயிரிழந்துவிட்டதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.






# ஷகிப் அல் ஹசனை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு பிறப்பிப்பு



பங்களாதேஷ் கிரிக்கெட் ஜாம்பவான் ஷகிப் அல் ஹசனை கைது செய்ய நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 37 வயதாகும் ஷகிப் அல் ஹசன் கடந்த ஆகஸ்ட் 2024 முதல் பங்களாதேஷ் நாட்டுக்குச் செல்லாமல் வெவ்வேறு நாடுகளிலிருந்து வருகிறார்.

பங்களாதேஷில் அரசு கவிழ்க்கப்பட்டது முதல் ஷகிப் அல் ஹசன் தனது நாட்டுக்குச் செல்லாமல் தவிர்த்து வருகிறார். அவர் மீது காசோலை மோசடி வழக்கு ஒன்று கடந்த டிசம்பர் 18 அன்று பதிவு செய்யப்பட்டு இருந்தது. அந்த வழக்கில் நேரில் ஆஜராகுமாறு பங்களாதேஷ் நீதிமன்றம் அவருக்கு உத்தரவிட்டு இருந்தது.

ஜனவரி 19ஆம் திகதிக்குள் அவர் ஆஜராக வேண்டும் என உத்தரவு விடப்பட்டிருந்தது. ஆனால், ஜனவரி 19 வரை அவர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்பதால் ஷகிப் அல் ஹசனை கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அவர் தற்போது இங்கிலாந்தில் இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டு பங்களாதேஷில் அரசுக்கு எதிராகக் கலவரம் நடந்த போது ஷகிப் அல் ஹசன் கிரிக்கெட் போட்டிகளில் ஆடுவதை முன் வைத்து நாட்டை விட்டு வெளியேறி இருந்தார். அவர் அப்போது ஆளுங்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. எதிர்க்கட்சியினர் அவர் மீது கோபத்தில் இருந்ததால் அவர் நாடு திரும்பவில்லை.

அதன் பின் பங்களாதேஷ் கிரிக்கெட் அணியிலும் அவருக்கு இடம் அளிக்கப்படாத நிலையில் அவர் இங்கிலாந்து கவுன்டி போட்டிகளில் விளையாடி வந்தார். அதில் அவரின் பந்துவீச்சி மீது குற்றச்சாட்டு எழுந்தது. இதை அடுத்து அவர் விதிகளின்படி பந்து வீச்சு செய்கிறாரா? என்பதை அறியப் பரிசோதனை நடத்தப்பட்டது.

அதில் ஷகிப் அல் ஹசன் தோல்வி அடைந்ததார். அதனால், அவர் இனி பந்து வீச முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற் பந்துவீச்சாளராக இருந்த அவருக்கு இந்த மோசமான நிலை ஏற்பட்டு சில நாட்களே ஆகும் நிலையில் தற்போது கைது உத்தரவும் பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது.

# அவுஸ்திரேலிய கப்டன் ஸ்டீவ் ஸ்மித்துக்கு முழங்கையில் காயம்



இலங்கைக்கு எதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்கு முன்னதாக அவுஸ்திரேலிய அணிக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கு சில நாட்களே உள்ள நிலையில், 2025 பிக் பாஷ் லீக் தொடரில் வெள்ளிக்கிழமை (17) சிட்னி சிக்சர்ஸ் மற்றும் சிட்னி தண்டர்ஸ் அணிகளுக்கு இடையேயான போட்டியின் போது, அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்டீவ் ஸ்மித்துக்கு முழங்கையில் காயம் ஏற்பட்டுள்ளது.

காயம் குணமாகும் வரை ஓய்வில் இருக்குமாறு வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளமையினால், எதிர்வரும் ஜனவரி 29 ஆம் திகதி ஆரம்பமாகும் இலங்கையுடனான டெஸ்ட் தொடரில் அவர் பங்கேற்பாரா என்பது தொடர்பில் சந்தேகம் எழுந்தள்ளது.

எவ்வாறெனினும், அவுஸ்திரேலிய கிரிக்கெட் தகவல்களுக்கு அமைவாக ஸ்டீவ் ஸ்மித் ஜனவரி 21 ஆம் திகதி சிட்னியில் ஒரு நிபுணரைச் சந்திப்பார் என்று கூறப்படுகிறது.

மேலும் அவர் இலங்கை தொடரில் பங்கேற்பது அந்த ஆலோசனையின் முடிவுகளைப் பொறுத்து அமையும்.

அவுஸ்திரேலிய அணியின் வழக்கமான தலைவர் பேட் கம்மின்ஸ் இலங்கையுடனான தொடரில் இல்லாத நிலையில் 35 வயதான ஸ்டீவ் ஸ்மித்துக்கு தலைமைப் பொறுப்பு வழங்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டில் அவருக்கு ஏற்கனவே ஒரு அறுவை சிகிச்சை செய்யப்பட்டதால், வலது கை துடுப்பாட்ட வீரரான அவர் முழங்கை காயங்களுடன் மிகவும் கஷ்டத்துடன் இருந்துள்ளார்.




பேருவளை உதைப்பந்தாட்டச் சங்கம் "தலைவர் ரிஸ்வான் ஸாலி வெற்றிக்கிண்ணம்" இறுதிப் போட்டி சனிக்கிழமை களுத்துறை வேனன் பெர்ணான்டோ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. பேருவளை கிரேட் ஸ்டார் உதைப்பந்தாட்ட கழகமும், தர்கா நகர் ரெட் ஸ்டார் உதைப்பந்தாட்ட கழகமும் இறுதிப் போட்டியில் மோதியதோடு, பேருவளை கிரேட் ஸ்டார் விளையாட்டு கழகம் 6-1 என்ற கோல் வீதத்தில் வெற்றி பெற்று சாம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. (படங்கள் : பீ.எம். முக்தார்)

# U19 ரி20 உலகக் கிண்ணம் முதல் போட்டியில் இந்திய மகளிர் அணி அபார வெற்றி







19 வயதுக்குப்பட்டோருக்கான ரி20 உலகக் கிண்ணத் தொடரை இந்திய அணி அசத்தலான வெற்றியுடன் தொடங்கியுள்ளது.

19 வயதுக்குப்பட்டோருக்கான ஐசிசி மகளிர் ரி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் நேற்று முன்தினம் மலேசியாவில் ஆரம்பமானது. இந்தத் தொடரில் இந்திய அணி அதன் முதல் போட்டியில் 9விக்கெட்டுகளில் அபார வெற்றி பெற்றது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற இந்திய அணி பந்துவீச்சைத் தேர்வு செய்ய, மேற்கிந்தியத் தீவுகள் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. இந்திய அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் மேற்கிந்தியத் தீவுகள் 13.2 ஓவர்களில் 44 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. அந்த அணியில் கெனிகா கேசர் அதிகபட்சமாக 15 ஓட்டங்கள் எடுத்தார். 5 வீராங்கனைகள் ஓட்டங்கள் ஏதும் எடுக்காமலும், 3 பேர் ஒற்றை இலக்கங்களில் ஆட்டமிழந்தனர்.

இந்தியத் தரப்பில் பருணிகா சிசோடியா 3 விக்கெட்டுகளையும், ஜோஷிதா மற்றும் ஆயுஷி சுக்லா தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். 45 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணி 4.2 ஓவர்களில் இலக்கை எட்டி 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. சானிகா சால்கே 18 ஓட்டங்களுடனும், கமலினி 16 ஓட்டங்களுடனும் களத்திலிருந்தனர்.

அபார பந்துவீச்சை வெளிப்படுத்திய ஜோஷிதா ஆட்ட நாயகியாகத் தேர்வு செய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம், நடப்பு சாம்பியனான இந்திய அணி இந்த உலகக் கிண்ணம் ரி0 தொடரை மிகவும் சிறப்பாகத் தொடங்கியுள்ளது.

# காலிறுதிக்கு முன்னேறினார் ஜோகோவிச்



கிராண்ட்ஸ்லாம் என்ற உயரிய அந்தஸ்து பெற்ற அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்போர்ன் நகரில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 4வது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான நோவக் ஜோகோவிச் (செர்பியா) – செக் குடியரசின் ஜிரி லெஹக்கா உடன் மோதினார்.

இந்த போட்டியில் தொடக்கம் முதலே அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஆதிக்கம் செலுத்திய ஜோகோவிச் 6-3, 6-4, 7-6 (7-4) என்ற செட் கணக்கில் ஜிரி லெஹக்காவை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். வரும் 21ம் திகதி நடைபெறும் காலிறுதி ஆட்டம் ஒன்றில் ஜோகோவிச், ஸ்பெயினின் கார்லஸ் அல்காரஸ் உடன் மோத உள்ளார்.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2025 ஜனவரி 20ம் திகதி திங்கட்கிழமை தயார் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது.